بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ     نَحۡمَدُہٗ وَنُصَلِّیۡ عَلٰی رَسُوۡلِہِ الۡکَرِیۡمِ     وَعَلٰی عَبۡدِہِ الۡمَسِیۡحِ الۡمَوۡعُوۡدِ

وَلَقَدۡ نَصَرَکُمُ اللّٰہُ بِبَدۡرٍ وَّاَنۡتُمۡ اَذِلَّۃٌ

தொகுதி 7

இதழ் 19

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly **BADAR** Qadian TAMIL

வருடாந்திர சந்தா ரூபாய் 575/-

ஆசிரியர் முஸ்லிம் அஹ்மது

துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

10 ஷவ்வால் 1443 ஹிஜ்ரி கமரி 12 ஹிஜ்ரத் 1401 ஹிஜ்ரி ஷம்ஸி 12 மே 2022


## அல்லாஹ்வின் கட்டளை

وَمَا نُرۡسِلُ الۡمُرۡسَلِیۡنَ اِلَّا مُبَشِّرِیۡنَ وَمُنۡذِرِیۡنَ ۚ فَمَنۡ اٰمَنَ وَاَصۡلَحَ فَلَا خَوۡفٌ عَلَیۡہِمۡ وَلَا ہُمۡ یَحۡزَنُوۡنَ

நற்செய்தி உடையவராகவும், அச்சமூட்டி எச்சரிக்கை செய்பவராகவுமின்றி நாம் தூதர்களை அனுப்புவதில்லை. ஆகவே, நம்பிக்கை கொண்டு (தம்மைச்) சீர்திருத்திக் கொள்கின்றனவர்களுக்கு (வருங்காலத்தைப் பற்றி) எவ்விதப் பயமும் ஏற்படாது. அவர்கள் (சென்ற காலம் பற்றிக்) கவலைப்படவும் மாட்டார்கள். (6:49)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்ய–தஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவி–யாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்.

**இறைவனின் முன்னால் அவனது அச்சத்தால்அழுவது நரகத்தை ஹராமாக்கி விடுகின்றது. இறைவனிடம் தூய்மை மற்றும் நேர்மைக்கு மதிப்பு உள்ளது என்ற விஷயத்தை ஒருபோதும் உங்களது உள்ளத்திலிருந்து அகற்றி விடாதீர்கள்**

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து...

### ஒரு துளி கண்ணீர் நரகத்தை ஹராமாக்கி விடும்

இறைவனின் மகத்துவம், கம்பீரம் மற்றும் அவனது அச்சம் மனிதனின் உள்ளத்தில் மேலோங்கி விட்டால் அவனிடம் ஓர் உருக்கமும், மன்றாடுதலும் உருவாகி இறைவனுக்காக கண்களிலிருந்து ஒரு துளி கண்ணீர் சிந்தினால் பின்னர் நிச்சயம் அவன் நரகத்தை (அந்த மனிதருக்கு) ஹராமாக்கி விடுகின்றான். ஆயினும் நான் மிகவும் அழுகின்றேன் என்று மனிதன் (பொய்யான அழுகையில்) ஏமாற்றத்திற்குள்ளாகி விட வேண்டாம். அதனால் கண்கள் வீங்கி கண் நோய்களுக்கு மனிதன் ஆளாகி விடுவதைத் தவிர வேறு எந்தப் பயனும் கிடைக்காது. நான் உங்களுக்கு அறிவுரை செய்கின்றேன். இறைவனின் முன்னால் அவனது அச்சத்திற்குள்ளாகி அழுவது நரகத்தை ஹராமாக்கி விடுகின்றது. ஆனால் இறைவனை இறைவனாகவும், அவனது தூதரை தூதராகவும் அவனது வேதத்தை உண்மையான வேதமாகவும் அறிந்து கொள்வதோடு நின்று விடாமல் அவற்றின் மீது ஈமானும் கொள்ளும் வரை அந்த உண்மையான மன்றாடுதல் மனிதனுக்கு கிடைக்க முடியாது. உதாரணமாக, மருத்துவர் ஒரு நோயாளிக்கு ஒரு மலமிளக்கியை கொடுக்கின்றார். அதனால் அவருக்கு லேசான வயிற்றுப் போக்கை ஏற்படுத்தி மருத்துவரின் மருந்து தன்னுடன் அனைத்து கழிவுகளையும், நச்சுக்களையும் எடுத்துக் கொண்டு வெளியேறி விடுகின்றது. மோசமான வயிற்றுப் போக்கு ஏற்படாத வரை அந்த நோயாளி வீணாகி விடுவதில்லை. உள்ளுக்குள்ளேயே இருந்து கொண்டு அந்த நோயாளியை நிம்மதியிழக்கச் செய்து துன்பம் கொடுத்து வந்த எல்லா வகையான அசுத்தங்களையும், விஷங்களையும் வெளியேற்றி விடுகின்றது. அப்போது அவருக்கு குணம் கிடைத்து விடுகின்றது. இறைவனிடம் தூய்மை மற்றும் நேர்மைக்கு மதிப்பு உள்ளது என்ற விஷயத்தை ஒருபோதும் உங்களது உள்ளத்திலிருந்து அகற்றி விடாதீர்கள்.

(மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 371 – 2018 ஆம் ஆண்டு காதியானில் அச்சிடப்பட்டது)

## நபிமொழி

### ரமலானில் விடுபட்ட நோன்புகள்

1950: நான் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் இவ்வாறு கூறுக்கேட்டேன் என்று அபூசல்மா அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் கூறினார்கள்: எனக்கு ரமலானின் சில நோன்புகள் விடுபட்டு விட்டால் அதனை ஷஅபான் மாதத்தில் தவிர (மற்ற நாட்களில்) என்னால் முழுமை செய்ய முடியாது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மும்முரமான பணிகள் அல்லது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் பணிவிடை செய்ததே இதன் காரணம் என்று யஹ்யா கூறுகிறார்.

### நோன்பு திறக்கும் நேரம்

1954: ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

சூரியன் மறைந்து, இங்கிருந்து (கிழக்கு திசையிலிருந்து) இரவு முன்னோக்கி வந்து, அங்கிருந்து (மேற்கு திசையிலிருந்து) பகல் பின்னோக்கிப்போனால் மேலும் சூரியன் மறைந்து விட்டால் நோன்பாளி நோன்பை திறந்திருக்க வேண்டும்.

(சஹீஹ் புகாரி தொகுதி 3, பாடம் நோன்பு – 2008 ஆம் ஆண்டு காதியானில் அச்சிடப்பட்டது)

**எவர்கள் பெண் பிள்ளைகள் பிறப்பதை தீயதாக கருதுகின்றார்களோ அவர்களது இந்த செயல் மிகவும் மோசமானதாகும். பெண் பிள்ளைகள் பிறக்காவிட்டால் அவர்கள் எப்படி பிறந்திருப்பார்கள். எதிர்காலத்தில் பெண் பிள்ளைகள் பிறக்காவிட்டால் அவர்களின் ஆண் பிள்ளைகளின் சந்ததிகள் எவ்வாறு தொடர முடியும்**

یَتَوَارٰی مِنَ الۡقَوۡمِ مِنۡ سُوۡٓءِ مَا بُشِّرَ بِہٖ ؕ اَیُمۡسِکُہٗ عَلٰی ہُوۡنٍ اَمۡ یَدُسُّہٗ فِی التُّرَابِ ؕ اَلَا سَآءَ مَا یَحۡکُمُوۡنَ

ஸய்யிதுனா ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் சூரா அந்–நஹ்லின் 60 வது வசனத்திற்கு விளக்கமளித்தவாறு இவ்வாறு கூறுகின்றார்கள்:

பிள்ளையின் மீது நேசம் இருந்தபோதிலும் மனிதன் இந்த தயக்கத்தில் வீழ்ந்து விடுகின்றான். அதாவது இழிவை சகித்துக் கொண்டு பெண் பிள்ளையை உயிருடன் வாழ விடுவதா? அல்லது அந்த அப்பாவி பிள்ளையை உயிருடன் புதைத்து விடுவதா? என்ற நிலைக்கு அவன் ஆளாகின்றான். இந்த விஷயத்தை நினைவிற் கொள்ள வேண்டும். பெண் பிள்ளைகளை உயிருடன் புதைக்கின்ற வழக்கும் அரபு மக்களிடம் பொதுவனதாக இருந்ததாக பொது மக்கள் கருதுகின்றனர். ஆனால் அது தவறாகும். அவ்வாறு இருந்திருந்தால் பின்னர் அந்த நாட்டின் பெண்களின் எண்ணிக்கை மிகக் குறைவாக இருந்திருக்க வேண்டும். அசல் விஷயம் என்னவென்றால், பெண் பிள்ளைகள் பிறப்பதை நிச்சயமாக அரபினுடைய அனைத்து தேசங்களிலும் தீயதாகவே கருதப்பட்டு வந்தது. ஆனால் பெண் பிள்ளைகளை உயிருடன் புதைக்கின்ற வழக்கம் செயல் ரீதியில் சில பெரிய பெரிய மற்றும் ஆணவம் மிக்க மக்களிடம் மட்டுமே இருந்தது. பெண் பிள்ளைகளின் பிறப்பை தீயதாக கருதுவது வேறு விஷயமாகும். அதனை உயிருடன் புதைப்பது என்பது வேறொரு விஷயமாகும். இன்று வரை பெண் பிள்ளைகள் பிறப்பதை பொதுவாக மக்கள் தீயதாகவே கருதுகின்றனர். اِلَّا مَاشَاءَ اللّٰہ

பெண் பிள்ளைகள் பிறக்காவிட்டால் அவர்கள் எப்படி பிறந்திருப்பார்கள். எதிர்காலத்தில் பிள்ளைகள் பிறக்காவிட்டால் அவர்களின் ஆண் பிள்ளைகளின் சந்ததிகள் எவ்வாறு தொடர முடியும்.

(தஃப்ஸீரே கபீர், தொகுதி 4 பக்கம் 185 – 2010 ஆம் ஆண்டு அச்சிடப்பட்டது)

## இந்த இதழில்


| |
|---|
| *திருக்குர்ஆன்* |
| *நபிமொழி* |
| *மல்ஃபூஸாத்* |
| *தஃப்ஸீரே கபீர் (திருக்குர்ஆன் விளக்கவுரை )* |
| *ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் குத்பா பேருரை 08 ஏப்ரல் 2022* |
| *ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் ஜப்பான் சுற்றுப்பயணம் – 2013 ஆம் ஆண்டு* |



பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**அல்லாஹ் தனது படைப்பினத்தின் நன்மைக்காக திறந்து வைத்துள்ள வாசல் ஒன்றே உள்ளது. அது துஆ என்ற வாசல் ஆகும். ஒரு நபர் மன்றாடுதலுடன் அந்த வாசலில் நுழையும்போது கம்பீரத்திற்குரிய அந்த எஜமானன் அவருக்கு தூய ஆடையை அணிவித்து விடுகின்றான். மேலும் தனது மகத்துவத்தின் மேன்மையை அவர் மீது எந்த அளவிற்கு வெளிப்படுத்துகின்றான் என்றால், அந்த நபர் வீணான பணிகளிலிருந்தும், பயனற்ற அசைவுகளிலிருந்தும் நூற்றுக்கணக்கான மைல் தொலைவில் விலகி ஓடி விடுகிறார் – (ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை))**

**உலகின் நிலைமைகளுக்காகவும் துஆக்கள் செய்யுங்கள். அல்லாஹ் உலகை அழிவிலிருந்து காப்பாற்றுவானாக. மேலும் தம்மைப் படைத்த இறைவனை அடையாளம் காண்பதற்கு அவர்களுக்கு அல்லாஹ் அறிவை வழங்குவானாக**

**அருளுக்குரிய ரமலானில் துஆவின் முக்கியத்துவமும், துஆ ஒப்புக் கொள்ளப்படுவதற்கான காரணிகளும், நிபந்தனைகளும்**

**وَالَّذِيۡنَ جَاهَدُوۡا فِيۡنَا لَنَهۡدِيَنَّهُمۡ سُبُلَنَا என்ற திருக்குர்ஆன் வசனத்திற்கு துஆக்கள் ஒப்புக் கொள்ளப்படுதலுடன் உள்ள நுட்பமான தொடர்பு**

**பத்ரி சஹாபிகளை பற்றி ஹுஸூர் அவர்கள் வழங்கிய ஜுமுஆ குத்பாக்களை உள்ளடக்கிய MTA தயாரித்த Website: www.313companions.org துவக்கி வைக்கப்பட்டது**

ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டன் இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 08 ஏப்ரல் 2022** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1401 -ஆம் ஆண்டு ஷஹாதத் மாதம் **08 ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

اَشۡهَدُ اَنۡ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحۡدَهٗ لَا شَرِيۡكَ لَهٗ وَاَشۡهَدُ اَنَّ مُحَمَّدًا عَبۡدُهٗ وَرَسُوۡلُهٗ

اَمَّا بَعۡدُ فَاَعُوۡذُ بِاللّٰهِ مِنَ الشَّيۡطٰنِ الرَّجِيۡمِ

بِسۡمِ اللّٰهِ الرَّحۡمٰنِ الرَّحِيۡمِ-

اَلۡحَمۡدُ لِلّٰهِ رَبِّ الۡعٰلَمِيۡنَ- الرَّحۡمٰنِ الرَّحِيۡمِ- مٰلِكِ يَوۡمِ الدِّيۡنِ- اِيَّاكَ نَعۡبُدُ وَاِيَّاكَ نَسۡتَعِيۡنُ-

اِهۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِيۡمَ- صِرَاطَ الَّذِيۡنَ اَنۡعَمۡتَ عَلَيۡهِمۡ ۙ

غَيۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَيۡهِمۡ وَلَا الضَّآلِّيۡنَ

وَاِذَا سَاَلَكَ عِبَادِىۡ عَنِّىۡ فَاِنِّىۡ قَرِيۡبٌ اُجِيۡبُ دَعۡوَةَ الدَّاعِ اِذَا دَعَانِ

فَلۡيَسۡتَجِيۡبُوۡا لِىۡ وَلۡيُؤۡمِنُوۡا بِىۡ لَعَلَّهُمۡ يَرۡشُدُوۡنَ

இந்த வசனத்தின் பொருள்: (தூதரே) என் அடியார்கள் உம்மிடம் என்னைப் பற்றி கேட்டால் நான் அருகில் இருக்கின்றேன். பிரார்த்தனை செய்கின்றனர் என்னை அழைக்கின்றபோது நான் அவருடைய பிரார்த்தனையை ஏற்றுக் கொள்கின்றேன். எனவே அவர்களும் என் கட்டளையினை ஏற்றுக் கொண்டு என்னிடம் நம்பிக்கை கொள்ள வேண்டும். இதனால் அவர்கள் நேர்வழி பெறுவார்கள் (என்று பதிலளிப்பீராக). (2:187)

அல்லாஹ்வின் அருளால் நாம் ரமலான் மாதத்தை கடந்து கொண்டிருக்கின்றோம். இந்த மாதம் துஆக்கள் ஒப்புக் கொள்ளப்படுவதற்கான மாதம் ஆகும். அல்லாஹ் இந்த மாதத்தில் சிறப்பான அருளுடன் துஆக்களை ஒப்புக் கொள்வதற்கான அறிவிப்பை செய்துள்ளான். மேலும் இந்த மாதத்தில் தனது சிறப்பான அருளின் ஊற்றை ஓடச் செய்துள்ளான். ஏனென்றால் இதில் மனிதன் தனது ஒவ்வொரு செயலையும் இறை திருப்தியை பெறுவதற்காக செய்கின்றான். எந்த அளவுக்கென்றால் உண்பதையும், பருகுவதையும் அல்லாஹ்வின் கட்டளையால் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் (மட்டுமே) செய்கின்றான்.

எனவே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: சொர்க்கத்தின் வாசல்கள் இந்த மாதத்தில் திறக்கப்படுகின்றன. மேலும் நரகத்தின் வாசல்கள் அடைக்கப்படுகின்றன. இந்த மாதத்தில் ஷைத்தான் விலங்கிடப்படுகின்றான் என்று அல்லாஹ் கூறியுள்ளான்.

(சஹீஹ் முஸ்லிம், கிதாபுஸ் ஸியாம்... ஹதீஸ் எண் 2495)

அல்லாஹ்வின் நெருக்கத்தை பெறுவதற்கான ஏற்பாட்டை அல்லாஹ் நமக்கு செய்து தந்துள்ளான். இது நமது நற்பேறு ஆகும். அதுபோன்ற நிலையில் இறைவன் புறமிருந்து நமக்கு வாய்ப்பு வழங்கப்பட்ட பிறகும் நாம் அதிலிருந்து பயன்பெறவில்லையென்றால் அது நமது துர்பாக்கியம் ஆகும். ரமலான் மாதத்தில் உலகில் விபச்சாரம் செய்பவர்களும், கொள்ளையர்களும், திருடர்களும், தீயவர்களும், அயோக்கியர்களும் தமது பணியை செய்வதில்லையா? செய்கின்றனர். நிச்சயமாக செய்கின்றனர். எல்லா ஷைத்தானும் விலங்கிடப்பட்டு விட்டான் என்றால் பின்னர் அவர்கள் இந்த ஷைத்தானிய பணியை எவ்வாறு செய்கின்றனர்? உண்மையில் இது நம்பிக்கையாளர்களுக்கான அறிவுரை ஆகும். மேலும் அல்லாஹ்வின் நெருக்கத்தை பெற விரும்புகின்ற மக்களுக்கான அறிவுரை ஆகும்.

அல்லாஹ் ரமலான் மாதத்தில் இவ்வாறு கூறுகின்றான்: நீங்கள் நான் கூறியதால் ஆகுமான பணிகளிலிருந்து உங்களை நீங்களே தடுத்து நிறுத்திக் கொண்டீர்கள். எனவே நான் உங்களுக்கு நற்செய்தி வழங்குகின்றேன். சாதாரண நிலைமைகளில் ஷைத்தானிற்கு முழு சுதந்திரம் கிடைத்திருக்கின்றது. அவன் அல்லாஹ்விடம் இவ்வாறு காலக்கெடு வேண்டியிருந்தான். அதாவது இடப் புறமும், வடப்புறமும், முன்னும், பின்னும் மனிதன் மீது தாக்குதல் நடத்தி நான் அவனை தடுமாற்றம் அடையச் செய்து என் பின்னால் அவனை நடக்கச் செய்வேன் என்று ஷைத்தான் கூறியிருந்தான். இறைவன் கூறுகிறான்: அந்த ஷைத்தானை இந்த மக்களுக்காக இன்று நான் கட்டிப்போட்டு விட்டேன். அல்லது ரமலானின் மாதத்தில் அவன் விலங்கிடப்பட்டு விட்டான். மேலும் எவர்கள் எனக்காக நோன்பு நோற்கின்றார்களோ, மேலும் தமது உணவையும், பானத்தையும் குறைத்துக் கொள்கின்றார்களோ மேலும் தமது ஆன்மீகத்தில் முன்னேறுவதற்கு முயற்சி செய்கின்றார்களோ அப்படிப்பட்ட மக்களை நான் முற்றிலும் எனது பாதுகாப்பின் கோட்டையில் எடுத்துக் கொண்டு விட்டேன்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:

பௌதீக உணவை குறைத்துக் கொண்டு, ஆன்மீக உணவை அதிகரிக்கின்றனர். அல்லது அதற்காக முயற்சி செய்கின்றனர். இதுவே நோன்பு மற்றும் ரமலானின் ஆன்மா ஆகும்.

(மல்ஃபூஸாத் தொகுதி 9 பக்கம் 123)

அல்லாஹ் அப்படிப்பட்ட மக்களின் ஷைத்தான்களை முழுமையான முறையில் விலங்கிட்டு விடுகின்றான். பின்னர் நோன்பாளிகளுக்கு நற்கூலியாக நான் சுயமே ஆகி விடுகின்றேன் என்று அல்லாஹ் கூறுகின்றான்.

(சஹீஹ் புகாரி, கிதாபுத் தவ்ஹீத்... ஹதீஸ் எண் 7492)

எவ்வளவு பெரிய நற்செய்தி ஆகும்! எனவே நாம் இதிலிருந்து அருள் பெறுவதற்கு முயற்சி செய்ய வேண்டும். மேலும் சொர்க்கத்தின் வாசல்கள் அதாவது அல்லாஹ் நமக்காக திறந்து வைத்துள்ள சொர்க்கத்தின் எல்லா வாசல்கள் வழியாகவும் நுழைவதற்கு முயற்சி செய்ய வேண்டும்.

எனக்கு நீங்கள் பசியோடும், தாகத்தோடும் இருப்பதில் எந்த ஆர்வமும் இல்லை. நீங்கள் காலையில் ஸஹ்ரி செய்தீர்கள். மாலையில் இஃப்தாரி செய்தீர்கள். ஆனால் இரவிலும், பகலிலும் உங்களிடம் எதிர்பார்க்கப்பட்ட நன்மைகளை நீங்கள் செய்யவில்லை. எனவே இந்த பசியோடும், தாகத்தோடும் இருப்பதும், நாள் முழுவதும் எதுவும் உண்ணாமலும்,

குடிக்காமலும் இருப்பதும் உங்களுக்கு எந்தப் பயனும் தராது. நீங்கள் இப்படி பசியோடும், தாகத்தோடும் இருப்பதில் எனக்கு எந்த நோக்கமும் இல்லை என்று அல்லாஹ் கூறக்கூடிய மக்களைச் சார்ந்தவர்களாக நாம் ஆகி விடக் கூடாது. நமக்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மூலமாக இந்த தூதுச் செய்தி கிடைத்துள்ளது.

(சஹீஹுல் புகாரி, கிதாபுஸ் ஸியாம்..... ஹதீஸ் எண் 1903)

எனவே ரமலானின் நோக்கமாக அமைந்துள்ள அந்த ஆன்மாவை புரிவதும், அதற்கேற்ப நமது வாழ்க்கையை கழிப்பதும் அவசியம் ஆகும்.

நான் (தொடக்கத்தில்) ஓதிய அந்த வசனம் என்பது ரமலானின் கடமைகள், கட்டளைகள் மற்றும் நோன்புகளின் முக்கியத்துவம் தொடர்பாக எடுத்துரைக்கப்படும் வசனங்களுக்கு மத்தியில் வரக் கூடிய வசனமாகும். அந்த வசனத்தில் அல்லாஹ் துஆக்கள் ஒப்புக் கொள்ளப்படுவதற்கான வழிமுறை அல்லது எந்த மக்களின் துஆ ஒப்புக் கொள்ளப்படுகின்றது என்பதை பற்றி எடுத்துரைக்கின்றான். மேலும் இபாதுர் ரஹ்மான் என்ற அடியார்களை பற்றியும், இபாதுர் ரஹ்மான் என்ற அடியார்களாக ஆக விரும்புபவர்களைப் பற்றியும், ஷைத்தானுடைய கட்டுப்பாட்டிலிருந்து வெளியேற விரும்பும் மக்களைப் பற்றியும், தனது துஆக்கள் ஒப்புக் கொள்ளப்படுகின்ற காட்சியை பார்க்க விரும்புகின்ற மக்களைப் பற்றியும் அல்லாஹ் அந்த வசனத்தில் கூறியுள்ளான்.

அல்லாஹ் அந்த வசனத்தின் துவக்கத்திலேயே இவ்வாறு கூறுகின்றான்: எனது தூதரே! எனது அடியார்கள் எங்களது இறைவன் எங்கே இருக்கின்றான்? என்று என்னைப் பற்றி கேள்வி கேட்டால், மேலும் ஒரு நேசரைப் போன்று நிம்மதியிழந்து கேட்டால், மேலும் அல்லாஹ்வை அடைவதற்கான எல்லா முயற்சிகளை செய்வதிலும் நிம்மதியின்மையை வெளிப்படுத்தினால் பின்னர், பதற்றமடைய வேண்டாம். நான் உங்களுக்கு அருகிலேயே இருக்கின்றேன் என்று அவர்களிடம் கூறும்படி அல்லாஹ் கூறியுள்ளான். எனவே முதலாவது விஷயம் அல்லது நிபந்தனை என்னவென்றால், தன்னை அடைவதற்கு அல்லாஹ்வின் அடியாராக ஆக வேண்டும் என்ற நிபந்தனையை அல்லாஹ் வகுத்துள்ளான்.

மனிதன் இறைவனுடைய அடியாராக ஆகுவதற்குரிய உரிமையை வழங்கக் கூடியவனாக ஆகி விட்டால் பின்னர் அல்லாஹ் கூறுகின்றான்: நான் இன்ன இன்ன நபரது முறையீட்டையும் கேட்கின்றேன். அந்த நபரின் ஷைத்தானை சிறைபிடித்து விடுகின்றேன். ஷைத்தான் எப்போது தாக்குதல் நடத்தினாலும் உதவிக்காக நான் வந்து விடுவேன். வருடத்தில் ஒரு மாதமான ரமலான் என்ற மாதத்தில் மட்டுமல்ல. மாறாக, எப்போதும் அதுபோன்ற நபரை ஷைத்தானின் தாக்குதல்களிலிருந்து நான் பாதுகாப்பேன். நிபந்தனை என்னவென்றால், அந்த நபர் எனது அடியாராக இருப்பதற்குரிய உரிமையை நிறைவேற்ற வேண்டும். எனது கட்டளைகளை நிரந்தரமாக ஒப்புக் கொள்ள வேண்டும். ரமலான் மாதத்தில் மட்டும் நன்மைகளை மேற்கொள்ளாதீர்கள். மாறாக, (ஏனைய மாதங்களிலும்) அல்லாஹ்வின் உரிமைகளையும், அடியார்களுக்குரிய உரிமைகளையும் நிறைவேற்றுங்கள். திருக்குர்ஆனின் போதனையின்படி அமல் செய்யுங்கள். உங்களது ஈமானை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

அல்லாஹ் கூறுகின்றான்: எனது அனைத்து பண்புகளின் மீதும் முழுமையான உறுதியும், நம்பிக்கையும் வையுங்கள். அதன் பிறகு துஆ ஒப்புக் கொள்ளப்படுவதற்கான காட்சிகளை எப்படி நீங்கள் பார்ப்பீர்கள்? என்பதை கண்டு கொள்ளுங்கள். தமது வாழ்க்கையை இவ்வாறு அமைத்துக் கொள்ளக் கூடியவர்களே உண்மையான நேர்வழியை பெறக் கூடியவர்கள் ஆவர். எனவே நம்மில் எவர் இந்த ரமலான் மாதத்தை தனது துஆ ஒப்புக் கொள்ளப்படுவதற்கான நிரந்தர வழிமுறையாக ஆக்கிக் கொள்கின்றாரோ அவர் நற்பேறு பெற்றவர் ஆவார்.

அவர் அல்லாஹ்வின் உண்மையான அடியாராக ஆகக் கூடியவர் ஆவார். அல்லாஹ்வின் கட்டளைகளின்படி அமல் செய்யக் கூடியவர் ஆவார். நாம் நமது ஈமானை முழுமை செய்யக் கூடியவராக இருக்க வேண்டும். இக்காலத்தின் இமாம், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மைப் பேரன்பரான வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் மஹ்தியை ஒப்புக் கொள்வதற்கும் அல்லாஹ் நமக்கு நற்பேறு வழங்கியுள்ளான். இது நமது நற்பேறு ஆகும். அவர் நமக்கு அல்லாஹ்வின் நெருக்கத்தை பெறுவதற்குரிய வழிகளையும், துஆ ஒப்புக் கொள்ளப்படுவதற்கான வழிகளையும், வழிமுறைகளையும், துஆக்களையும் கற்றுத் தந்துள்ளார்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஒரு சந்தர்ப்பத்தில் கூறுகின்றார்கள்: கம்பீரமிக்க அல்லாஹ் தனது படைப்பினத்தின் நன்மைக்காக திறந்து வைத்துள்ள வாசல் ஒன்றே உள்ளது. அது துஆ என்ற வாசல் ஆகும். ஒரு நபர் மன்றாடுதலுடன் அந்த வாசலில் நுழையும்போது கம்பீரத்திற்குரிய அந்த எஜமானன் அவருக்கு தூய ஆடையை அணிவித்து விடுகின்றான். மேலும் தனது மகத்துவத்தின் மேன்மையை அவர் மீது எந்த அளவிற்கு வெளிப்படுத்துகின்றான் என்றால், அந்த நபர் வீணான பணிகளிலிருந்தும், பயனற்ற அசைவுகளிலிருந்தும் நூற்றுக்கணக்கான மைல் தொலைவில் விலகி ஓடி விடுகிறார்.

(மல்ஃபூஸாத் தொகுதி 5 பக்கம் 438 – 1984 ஆம் ஆண்டு அச்சிடப்பட்டது)

அடுத்து துஆ ஒப்புக் கொள்ளப்படுவதற்கு எப்படிப்பட்ட நிலையை உருவாக்குவது அவசியமாகும்? துஆ ஒப்புக் கொள்ளப்படுவதற்கு என்ன என்ன விஷயங்கள் அவசியமாகும்? மேலும் அல்லாஹ்வின் அடியாராக ஆகுவதற்கு என்ன என்ன விஷயங்கள் அவசியமாகும்? என்பதை விவரித்தவாறு அன்னார் (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்:

எந்த நபர் செயல்களால் பணி செய்வதில்லையோ அவர் துஆ செய்யவில்லை. மாறாக, அவர் இறைவனை சோதித்து பார்க்கின்றார் என்ற விஷயம் உண்மையாகும். எனவே துஆ செய்வதற்கு முன்பு தனது அனைத்து ஆற்றல்களையும் செலவிடுவது அவசியமாகும்.

اِهۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِيۡمَ என்ற இந்த துஆவிற்கு இதுவே பொருளாகும். மனிதன் தனது கொள்கை மற்றும் செயல்களை முதலில் சீர்தூக்கிப் பார்ப்பது அவசியம் ஆகும். தனது கொள்கைகளையும், தனது செயல்களையும் ஆய்வு செய்து பார்க்க வேண்டும். ஏனென்றால், சீர்திருத்தம் காரணிகளின் வழிமுறையின் மூலமாகவே நடைபெறுகின்றது. இது இறைவனின் நடைமுறையாகும். சீர்திருத்தத்திற்கு காரணமாக அமைகின்ற ஏதாவதொரு காரணியை அவன் உருவாக்கி விடுகின்றான். துஆ செய்யும்போது காரணிக்கு என்ன அவசியம் வந்து விட்டது? என்று கூறுகின்ற மக்கள் இந்த விஷயத்தை சற்று சீர்தூக்கிப் பார்க்க வேண்டும். துஆ செய்து விட்டோம். எனவே அமல்களுக்கும், ஏற்பாடுகளுக்கும் எந்த அவசியமும் இல்லை. முயற்சிகளுக்கும் எந்த அவசியமும் இல்லை என்றும் அவர்கள் கருதுகின்றனர்.

அன்னார் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: அதாவது அந்த அறிவிலிகள் இந்த விஷயத்தை சிந்திக்க வேண்டும். துஆ என்பது சுயமே ஒரு மறைவான காரணியாகும். அது ஏனைய காரணிகளை உருவாக்குகின்றது.

(மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 124 – 1984 ஆம் ஆண்டு அச்சிடப்பட்டது)

துஆ என்பது சுயமே மறைந்திருக்கின்ற ஒரு காரணியாகும். அது ஏனைய காரணிகளை உருவாக்குவதற்கு வழிமுறையாக அமைகின்றது. எனவே துஆ ஒப்புக் கொள்ளப்படுவதற்கும், அல்லாஹ்வின் அடியாராக ஆகுவதற்கும் ஒன்று, மனிதன் முயற்சி செய்து அல்லாஹ்விடம் அவனது அருளை வேண்டுவது அவசியம் ஆகும். அவனது அருள் என்பது மன்றாடி அவனது அடியார்களில் இணைந்து கொள்வதும், மேலும் அதற்காக முயற்சி செய்வதும் ஆகும். என்னை உனது அடியார்களில் இணைத்துக் கொள்வாயாக என்று அல்லாஹ்விடம் துஆ செய்ய வேண்டும். மேலும் கொள்கை மற்றும் செயல்களின் அடிப்படையில் அல்லாஹ்வின் சிறப்பான அடியார்களை சார்ந்தவர்களாக ஆகி விட வேண்டும். மேலும் அவர் துஆ செய்வதற்கு முன்பு தனது செயலையும், இறை திருப்திக்கேற்ப அமைப்பதற்கு முயற்சி செய்ய வேண்டும். மேலும் எந்த அடியார்களின் ஈமான் தடுமாற்றத்திற்கு அப்பாற்பட்டதாகவும், உறுதியானதாகவும், வலிமையானதாகவும் உள்ளதோ அப்படிப்பட்ட அடியார்களில் இணைந்து கொள்ள வேண்டும்.

அல்லாஹ் மண்ணின் துகளைக் கூட தங்கமாக ஆக்கக் கூடிய ஆற்றல் கொண்டிருக்கின்றான் என்ற இந்த விஷயத்தின் மீது அவர்கள் நம்பிக்கை வைக்கின்றனர். மிகவும் சீர்கெட்ட நபர்களையும் கூட தனது அடியார்களில் இணைத்துக் கொள்வதற்கு அவன் வலிமை படைத்துள்ளான். அவர்களுக்கு தனது வழிகளை காட்டிக் கொடுப்பான். மேலும் இறைவன் பக்கம் செல்லக் கூடிய வழிகளில் நடப்பவர்களாக அவர்களை இறைவன் ஆக்கி விடுவான். இந்த

கருத்தையும் அல்லாஹ் திருக்குர்ஆனில் எடுத்துரைத்துள்ளான். அதாவது எனது வழியில் செல்பவருக்கும், கடும் முயற்சி செய்பவருக்கும் நான் எனது வழியை காட்டுகின்றேன்.

அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான்:

وَالَّذِيْنَ جَاهَدُوْا فِيْنَا لَنَهْدِيَنَّهُمْ سُبُلَنَا

பொருள்: எவர்கள் எம்மை சந்திப்பதற்கு முயற்சி செய்கின்றார்களோ நாம் நிச்சயமாக அவர்களுக்கு எமது வழியை காட்டிக் கொடுக்கின்றோம்.

எனவே ரமலானின் இந்த மாதம் குறிப்பாக ஜிஹாதிற்கான மாதம் ஆகும். இதில் நாம் முழுமையாக முயற்சி செய்ய வேண்டும். அல்லாஹ்வின் அடியார்களை சார்ந்த மக்களில் நாமும் ஒருவராக ஆகி விடுவதற்கு ஒரு கடும் முயற்சி செய்ய வேண்டும். எவர்களுக்கு அருகில் இறைவன் இருக்கின்றானோ அந்த மக்களை சார்ந்தவர்களாக ஆகி விட வேண்டும். எவர்களின் துஆக்களை இறைவன் கேட்கின்றானோ அந்த மக்களை சார்ந்தவர்களாக நாம் ஆகி விட வேண்டும். மேலும் எவர்கள் அல்லாஹ்வின் கட்டளைகளின்படி நடக்கின்றார்களோ அந்த மக்களைச் சார்ந்தவர்களாக நாம் ஆகி விட வேண்டும். மேலும் எந்த மக்களுக்கு அல்லாஹ்வின் அனைத்து பண்புகள் மீதும் முழுமையான நம்பிக்கையும், உறுதியும் இருக்கின்றதோ அந்த மக்களைச் சார்ந்தவர்களாக நாம் ஆகி விட வேண்டும். மேலும் எவர்கள் உண்மையான நேர்வழியை பெற்ற மக்களாக இருக்கின்றார்களோ அந்த மக்களை சார்ந்தவர்களாக நாம் ஆகி விட வேண்டும். மேலும் எவர்களின் ஷைத்தான் நிரந்தரமாக சிறைபிடிக்கப்பட்டுள்ளானோ அந்த மக்களைச் சார்ந்தவர்களாக நாம் ஆகி விட வேண்டும். ஆனால் அல்லாஹ்வின் கூற்றிலிருந்து வெளிப்படுவதைப் போன்று முதலில் நமக்கு அதற்கான கடும் முயற்சியை செய்வது அவசியமாகும். நமது நிலைகளை அல்லாஹ்வின் திருப்திக்கேற்ப ஆக்கிக் கொள்வது அவசியமாகும்.

இது தொடர்பாக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் பல்வேறு சந்தர்ப்பங்களில் நமக்கு வழிகாட்டியுள்ளார்கள். பல்வேறு கோணங்களில் நமக்கு வழிகாட்டியுள்ளார்கள். எனவே ஓரிடத்தில் அன்னார் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: எந்த நபர் மிகவும் கவனக்குறைவுடன் சோம்பல் செய்து வருவாரோ, அவர் அதே நிலையில் இறைவனின் அருளிலிருந்து பயன்பெற்று விடுவதென்பது எவ்வாறு சாத்தியமாகும்? முழுமையான அறிவு, முழுமையான ஆற்றல், முழுமையான தூய்மை ஆகியவற்றுடன் இறைவனை தேடுகின்ற நபர் இறை அருளைப் பெறுவதைப் போன்று அவர் எவ்வாறு இறை அருளிலிருந்து பயன் பெற முடியும்?

இதன் பக்கம் மற்றோர் இடத்திலும் அல்லாஹ் சுட்டிக் காட்டியுள்ளான். அந்த இடம் இதுவாகும். அல்லாஹ் கூறுகின்றான்:

وَالَّذِيْنَ جَاهَدُوْا فِيْنَا لَنَهْدِيَنَّهُمْ سُبُلَنَا

பொருள்: எமது வழியில் முயற்சி செய்கின்றவர்களுக்கு நிச்சயமாக நாம் எமது வழிகளை காட்டிக் கொடுகின்றோம்.

(பராஹீனே அஹ்மதிய்யா தொகுதி 4, ரூஹானீ கஸாயின் தொகுதி 1 பக்கம் 566, 567 அடிக்குறிப் எண். 11)

எனவே அல்லாஹ் தெளிவுபடுத்தி விட்டான். அதாவது கவனக்குறைவுடனும், சோம்பலுடனும் செயல்படக் கூடியவர்கள், தமது அனைத்து ஆற்றல்கள் மற்றும் திறமைகளுடன் அல்லாஹ்வின் நெருக்கத்தை பெறுவதற்கு முயற்சி செய்யக் கூடிய மேலும் ஒரு ஜிஹாத் செய்யக் கூடிய மக்களைச் சார்ந்தவர்களாக ஆகி விடுவது சாத்தியமில்லை.

நாங்கள் நிறைய துஆ செய்துள்ளோம். ஆனால் எங்களது நோக்கத்தில் எங்களால் வெற்றி பெற முடியவில்லை என்று மக்கள் கேள்வி கேட்கின்றனர். எனக்கு கடிதமும் எழுதுகின்றனர். இவர்கள் கூறுவது தவறாகும். அல்லாஹ் தவறிழைக்கவில்லை. எதனை மனிதன் தன் சார்பாக துஆவின் உயர் அளவுகோலாக கருதுகின்றானோ அது அல்லாஹ்வின் பார்வையில் குறையுடையதாக இருக்கக் கூடும். இன்னும் அவருக்கு அதிகம் ஜிஹாத் செய்வதற்கு அவசியம் இருக்கக் கூடும். எனவே தனது துஆவின் வழிமுறையையும் (ஆய்வு செய்து) பார்ப்பது அவசியமாகும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: எந்த நபர் தனது அனைத்து அறிவுடனும், முழுமையான ஆற்றலுடனும், முழுத் தூய்மையுடனும் இறைவனை தேடுகின்றாரோ அப்படிப்பட்ட நபருக்கு நிச்சயம் நாம் எமது வழியை காட்டிக் கொடுத்து விடுகின்றோம் என்று இறைவன் கூறுகின்றான். எனவே நாம் இந்த விஷயத்தை பார்க்க வேண்டும். நாம் நமது அறிவிற்கேற்ப, நமது அனைத்து திறமைகளுக்கும் ஏற்ப فَلْيَسْتَجِيْبُوْا لِيْ (எனது கூற்றை செவிமடுக்க வேண்டும்) என்ற இந்த கட்டளையின் மீது நாம் அமல் செய்திருக்கின்றோமா? நாம் அல்லாஹ்வின் கட்டளைகளின்படி முழுமையாக அமல் செய்வதற்கு முயற்சி செய்து கொண்டிருக்கின்றோமா? அல்லாஹ்வின் எல்லா கூற்றிற்கும் செவிமடுப்பதற்கு முழுமையான அழுத்தத்தை கொடுக்கின்றோமா? முழுமையான தூய்மையுடனும், நன்றியுணர்வுடனும் நாம் அல்லாஹ்வின் கட்டளைகளின்படி அமல் செய்து கொண்டிருக்கின்றோமா? என்று (ஆய்வு செய்து) பார்க்க வேண்டும். அவ்வாறு நாம் செய்யவில்லையென்றால் பின்னர் அல்லாஹ் எங்களது துஆக்களை கேட்கவில்லை என்று நாம் முறையீடு செய்யக் கூடாது. எனவே துஆக்கள் ஒப்புக் கொள்ளப்படுவதற்காக முதலில் தனது நிலைகளை மாற்றி இறைவனின் பக்கம் முன்னேறுவது அவசியமாகும். ஜிஹாத் செய்வதும் அவசியம் ஆகும்.

அடியாரால் ஜிஹாதின் உச்சத்தை தொட முடியாது. அல்லாஹ் தனது அடியாரின் மீது எந்த அளவிற்கு கருணையாளனாக இருக்கின்றான் என்றால் அடியாரின் கடுகளவு முயற்சியையும் அந்த ஜிஹாதின் அங்கமாக கருதி இறைவன் அருளுகின்றான். எல்லா பொருளின் மீதும் அவனது கருணை மேலோங்கி இருக்கின்றது. அவ்வாறிருக்க அடியாரின் முயற்சியும் எளிமையாகி விடுகிறது. அதனை அவன் எளிமையாக்கி விடுகின்றான்.

எனவே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறுகின்றார்கள்: அல்லாஹ் இவ்வாறு கூறியுள்ளான்: அடியார் என்னை நோக்கி ஓர் அடி நடந்து வந்தால் நான் இரண்டு அடி அவரை நோக்கி முன்னேறுகின்றேன். அடியார் என் பக்கம் நடந்து வந்தால் மேலும் வேகமாக நடந்து வருகின்றார் என்றால் பின்னர் நான் அவரை நோக்கி ஓடி வந்து விடுகின்றேன்.

(சஹீஹ் முஸ்லிம், கிதாபுஸ் ஸிக்ர் வ துஆ.... ஹதீஸ் எண் 6833)

எனவே அல்லாஹ் நம் மீது இந்த அளவிற்கு கருணையாளனாக இருக்கின்றான். ஆனால் விஷயம் இது மட்டுமே ஆகும். அதாவது தூய்மையும், நன்றியுணர்வும் நிபந்தனை ஆகும். எனவே நாங்கள் தொழுவோம். அல்லாஹ்வின் கட்டளைகளின்படி செயல்படுவோம். அல்லாஹ்விற்குரிய உரிமைகளை வழங்குவோம். அடியார்களுக்குரிய உரிமைகளையும் நிறைவேற்றுவோம் என்று ரமலானில் வாதம் செய்து விட்டு ரமலான் கடந்த பிறகு இறைவனையும், அவனது கட்டளைகளையும் மறந்து விடுபவர்களாக ஆகி விடக் கூடாது. பௌதீகம் நம் மீது மேலோங்கி விட்டால் பின்னர் இறைவன் மீது இந்த முறையீடு செய்தல் கூடாது. அதாவது நான் பிரார்த்தனை செய்பவரின் பிரார்த்தனையை கேட்கின்றேன் என்று அல்லாஹ் கூறுகின்றான். எனவே நான் ரமலானில் அல்லாஹ்விடம் அதிகம் பிரார்த்தனை செய்தேன். ஆனால் எனது துஆக்கள் கேட்கப்படவில்லை என்று முறையீடு செய்யக் கூடாது.

எப்போதும் நினைவிற் கொள்ள வேண்டும். எந்த ஒரு விஷயமும் அல்லாஹ்விடமிருந்து மறைவாக இல்லை. மனிதன் தனது வாக்குறுதியையும், நன்றியுணர்வையும் நிறைவேற்றுவதற்கு முன்னரும் வாக்குறுதி செய்தான். மேலும் அதை முறித்துக் கொண்டான். தற்போது ஒருவர் ரமலானில் மட்டுமே நன்மையின் பக்கம் கவனம் செலுத்துகின்றார் என்றால் பின்னர் அந்நிலையில் அல்லாஹ் தான் விரும்புகின்றபடி அதுபோன்ற மக்களிடம் நடந்து கொள்கின்றான். அதே நேரம் இவ்வாறும் நடக்கின்றது என்றால் அதாவது சில முறை அதுபோன்ற மக்களின் சில துஆக்களையும் அல்லாஹ் ஒப்புக் கொண்டு விடுகின்றான். அதன் மூலம் அல்லாஹ் துஆக்களை கேட்கின்றான் என்பது அவர்களுக்கு தெரிய வர வேண்டும் என்பதற்காக அவ்வாறு செய்கின்றான். எனவே மனிதன் அல்லாஹ்வின் பக்கமே எந்நேரமும் குனிந்திருக்க வேண்டும். எவ்வாறிருப்பினும் அல்லாஹ் அடியார் மீது அநீதியிழைப்பதில்லை. இறைவன் அடியாரை எப்போதும் தனது அன்பின் மடியில் வைப்பதற்கே முயற்சி செய்கின்றான்.

ஒரு தாய்க்கு தனது தொலைந்துபோன குழந்தையை சந்திப்பதால் எவ்வளவு மகிழ்ச்சி ஏற்படுகின்றதோ அல்லது பொருட்கள் நிரப்பப்பட்ட ஒரு பயணியின் ஒட்டகம் பாலைவனத்தில் தொலைந்து விட்ட பிறகு மீண்டும் அது கிடைத்து விடுவதால் அந்த பயணிக்கு எவ்வளவு மகிழ்ச்சி ஏற்படுமோ அதை விட அதிக மகிழ்ச்சி இறைவனுக்கு தனது அடியார்கள் தன் பக்கம்

திரும்பி வந்து விடுவதாலும், அடியார்கள் தூயவர்களாக திகழ்ந்து தனது கூற்றுகளை ஒப்புக் கொள்வதன் மூலமும் ஏற்படுகின்றது.

எனவே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நமக்கு இந்த உதாரணங்களையெல்லாம் கொடுத்து அல்லாஹ்விற்கு இவ்வாறு மகிழ்ச்சி ஏற்படுகின்றது என்று மீண்டும் மீண்டும் இதனைக் கூறியுள்ளார்கள்.

(சஹீஹுல் புகாரி, கிதாபுல் அதப்... ஹதீஸ் எண் 5999, கிதாபுத் தஃவாத், பாபுத் தவ்பா ஹதீஸ் எண் 6309)

எனவே நாம் தான் அல்லாஹ்வின் உரிமையை நிறைவேற்றுவதில் கவனக்குறைவுடன் செயல்படுகின்றோம். பின்னர் அல்லாஹ் எங்களது துஆக்களை கேட்கவில்லை என்றும் முறையீடு செய்கின்றோம். எனவே நாம் இந்த அடிப்படையில் நம்மை நாமே ஆய்வு செய்ய வேண்டும். மேலும் நாம் இந்த ரமலானை இறைவனை அடைவதற்குரிய வழிமுறையாக ஆக்கிக் கொள்வோம். அவனது கட்டளைகளின்படி செயல்படுவதற்கு முழுமையாக முயற்சி செய்வோம் என்று உறுதிமொழி எடுக்க வேண்டும். எப்படிப்பட்ட நிலைமைகளை நாம் கடந்தாலும், எவ்வளவு நீண்ட காலம் நமக்கு கடும் முயற்சி செய்ய நேரிட்டாலும் அல்லாஹ்வின் அன்பு மற்றும் நெருக்கத்தை பெறுவதற்காக நாம் இந்த ஜிஹாதை செய்து கொண்டே செல்ல வேண்டும். நமது ஈமானை மேலும் மேலும் உறுதிவாய்ந்ததாக ஆக்கிக் கொண்டு செல்வதற்கு முயற்சி செய்ய வேண்டும். அதுபோன்ற நிலையை நாம் நம் மீது ஏற்படுத்திக் கொண்டு விட்டால் பின்னர் துஆ ஒப்புக் கொள்ளப்படுவதற்கான அற்புதங்களையும் நாம் பார்க்கக் கூடியவர்களாக இருப்போம். அந்த அந்தஸ்தை மக்கள் பெற்றுக் கொண்டே வந்துள்ளார்கள். இப்போதும் பெறுகின்றார்கள்.

எனவே ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: இந்த வசனம் இறங்கி 1300 வருடங்கள் கழிந்து விட்டன. வசனத்திலுள்ள கட்டளைக்கேற்ப பலரும் இந்த காலங்களில் கடும் முயற்சி செய்து வந்துள்ளனர். மேலும் لَنَهْدِيَنَّهُمْ என்ற வாக்குறுதியின் பங்கிலிருந்து பங்கு பெற்று வந்துள்ளனர். தற்போதும் பெறுகின்றார்கள். எதிர்காலத்திலும் பெறுவார்கள்.

(அல்ஹக் முபாஹிஸா தில்லி, ரூஹானீ கஸாயின் தொகுதி 14 பக்கம் 192)

எனவே அல்லாஹ்வின் இந்த அருளில் பங்கு பெறுபவர்களாக ஆகுவதற்கு நாமும் முயற்சி செய்ய வேண்டும். மேலும் அல்லாஹ்வின் திருப்தியை பெறக் கூடிய ஜிஹாதிலும், அல்லாஹ்வின் கட்டளைகளின்படி நடக்கக் கூடிய ஜிஹாதிலும், திருக்குர்ஆனின் 700ற்கும் அதிகமான கட்டளைகளின்படி செயல்படக் கூடிய ஜிஹாதிலும், ஈமானை முழுமையாக்கக் கூடிய ஜிஹாதிலும், அல்லாஹ்வின் பண்புகளை பெறக் கூடிய ஜிஹாதிலும் நாம் ஒருபோதும் எந்தக் குறைவும் செய்தல் கூடாது. நமது ஒவ்வொரு அடியும் முன்னேற்றத்தை நோக்கி அமைய வேண்டும். இந்த ரமலான் நமது இந்த ஜிஹாதின் ஒரு மைல் கல்லாக இருக்க வேண்டும்.

இந்த கருத்து தொடர்பாக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் மேலும் சில மேற்கோள்கள் மற்றும் ஆதாரங்களையும் நான் எடுத்து வைக்கின்றேன். இது எப்படிப்பட்ட கட்டுரை என்றால் இதனை மீண்டும் மீண்டும் கேட்டு புரிவது உண்மையிலேயே அவசியமாகும். இது நமது வாழ்வின் அங்கமாக ஆகி விட்டால் ஒரு புரட்சியை நம்மால் உலகில் ஏற்படுத்தி விட முடியும்.

அன்னார் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: நமது உலக வாழ்க்கையில் நமக்கு தெளிவாக தென்படுகின்றது. அதாவது நமது ஒவ்வொரு செயலுக்கும் நிச்சயம் ஒரு விளைவு உள்ளது. அந்த விளைவு இறைவனின் செயலாகும். அதுபோன்றே மார்க்கம் தொடர்பாகவும் அந்த சட்டம் தான் உள்ளது. அதனை இறைவன் இந்த இரண்டு உதாரணங்களில் தெளிவாக கூறுகின்றான்.

اَلَّذِيْنَ جَاهَدُوْا فِيْنَا لَنَهْدِيَنَّهُمْ سُبُلَنَا

فَلَمَّا زَاغُوْٓا اَزَاغَ اللّٰهُ قُلُوْبَهُمْ

பொருள்: எந்த மக்கள் அல்லாஹ்வை தேடுவதில் முழுமையாக முயற்சி செய்வதற்கு பகரமாக வேறு செயல்களை செய்வார்களோ அவர்களின் அந்த செயலின் விளைவாக கண்டிப்பாக எமது செயல் இவ்வாறு இருக்கும். அதாவது கடுமையாக முயற்சி செய்த மக்களுக்கு நாம் எமது வழிகளை காட்டிக் கொடுப்போம். ஆனால் எந்த மக்கள் கோணல் வழியை மேற்கொண்டார்களோ, நேர்வழியில் நடக்க விரும்பவில்லையோ அப்படிப்பட்ட மக்களுக்கு எமது செயல் எவ்வாறு அமையும் என்றால் நாம் அவர்களின் உள்ளங்களையும் கோணலாக்கி விடுவோம்.

(இஸ்லாமி உஸூல் கி ஃபிலாஸஃபி, ரூஹானீ கஸாயின் தொகுதி 10 பக்கம் 389)

எனவே இதனை வேறொரு கோணத்திலும் அன்னார் (அலை) அவர்கள் எடுத்துரைத்துள்ளார்கள். அல்லாஹ் கூறுகின்றான்: நீங்கள் எனது வழியை அடைய வேண்டுமென்றால், நீங்கள் ஜிஹாத் செய்து எமது அருளை பெற வேண்டுமென்றால் பின்னர் இந்த விஷயத்தையும் நினைவிற் கொள்ளுங்கள். அதாவது இதன் எதிர்மறை அம்சமும் உள்ளது. எனது வழியில் நடக்கவில்லையென்றால் பின்னர் உங்களது உள்ளம் கோணலாகி விடும். துஆக்கள் ஒப்புக் கொள்ளப்படுவது என்பது ஒரு பக்கம் இருக்கட்டும். உங்களது அந்த (தவறான) செயலின் விளைவாக மற்றும் அல்லாஹ்வின் வழியில் நடக்காததன் விளைவாக நீங்கள் ஷைத்தானின் மடியில் சென்று அமர்ந்து விடுவீர்கள். ஷைத்தானின் மடியில் விழுந்து விட்ட மனிதன் பின்னர் தனது உலகம் மற்றும் மறுமை இரண்டையும் சீர்கெடுத்துக் கொள்ளக் கூடியவனாக ஆகி விடுகின்றான். எனவே இந்த வழிகாட்டலில் எங்கு நற்செய்தி உள்ளதோ அங்கு அல்லாஹ் மற்றொரு வகையில் எச்சரிக்கையும் வழங்கி விட்டான்.

பின்னர் ஓரிடத்தில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் விவரித்தவாறு இவ்வாறு கூறுகின்றார்கள்: மனிதனின் உள்ளத்தில் பலதரப்பட்ட நிலைகள் உருவாகிக் கொண்டே இருக்கின்றன. இறுதியில் இறைவன் நற்பேறு பெற்ற ஆன்மாக்களின் பலவீனங்களை அகற்றி விடுகின்றான். மேலும் தூய்மை மற்றும் நன்மைக்கான ஆற்றலை அன்பளிப்பாக அருளுகின்றான். பின்னர் அந்த அடியாரின் பார்வையில் அந்த அனைத்து விஷயங்களும் வெறுக்கத்தக்கதாக ஆகி விடுகின்றன. அதாவது இறைவனின் பார்வையில் வெறுக்கத்தக்க விஷயங்கள் அனைத்தும் அவரது பார்வையிலும் வெறுக்கத்தக்கதாக ஆகி விடுகின்றன. மேலும் இறைவனுக்கு விருப்பமான வழிகள் அனைத்தும் அவனுக்கு விருப்பத்திற்குரியதாக ஆகி விடுகின்றன. அப்போது அவருக்கு எப்படிப்பட்ட ஆற்றல் கிடைக்கின்றதென்றால் அதன் பிறகு பலவீனம் அகன்று விடுகின்றது. மேலும் எப்படிப்பட்ட ஓர் உணர்வு வழங்கப்படுகின்றதென்றால் அதன் பிறகு சோம்பல் இருப்பதில்லை. மேலும் எப்படிப்பட்ட இறையச்சம் வழங்கப்படுகின்றதென்றால் அதன் பிறகு அவரிடம் பாவங்கள் வெளிப்படுவதில்லை. கண்ணியத்திற்குரிய இறைவன் எந்த அளவிற்கு திருப்தியடைந்து விடுகின்றான் என்றால் அதன் பிறகு அவரிடம் குற்றங்கள் வெளிப்படுவதில்லை. ஆயினும் இந்த அருட்கொடை ஒரு காலத்திற்கு பிறகு கிடைக்கின்றது. முதன் முதலில் மனிதன் தனது பலவீனங்களால் ஏராளமான தடுமாற்றங்களுக்கு ஆளாகின்றான். மேலும் கீழ்நோக்கி விழுந்து விடுகின்றான். ஆயினும் இறுதியில் அவர் உண்மையாளர் என்பதை கண்டு உயர்மிகு ஆற்றல் ஈர்த்து விடுகின்றது. அதாவது அல்லாஹ்வின் ஆற்றல் அவரை தன் பக்கம் இழுத்து விடுகின்றது. وَالَّذِيْنَ جَاهَدُوْا فِيْنَا لَنَهْدِيَنَّهُمْ سُبُلَنَا என்று அல்லாஹ் கூறியிருப்பதில் இந்த விஷயமே சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

அன்னார் (அலை) அவர்கள் அரபி மொழியிலும் இவ்வாறே கூறுகின்றார்கள்:

نُثَبِّتُهُمْ عَلَى التَّقْوٰى وَالْاِيْمَانِ وَنَهْدِيَنَّهُمْ

سُبُلَ الْمَحَبَّةِ وَالْعِرْفَانِ

وَسَنُيَسِّرُهُمْ لِفِعْلِ الْخَيْرَاتِ وَ تَرْكِ الْعِصْيَانِ

பொருள்: நாம் அவர்களை இறையச்சத்திலும், ஈமானில் உறுதிப்பாட்டிலும் நிலைநிறுத்தி விடுவோம். நாம் நிச்சயம் அவர்களுக்கு நேசம் மற்றும் இறைஞானத்தின் வழிகளின் பக்கம் வழிகாட்டுவோம். அவர்களுக்கு நற்செயல்கள் செய்வதற்கும், பாவங்களை விட்டு விலகுவதற்கும் நற்பேறு வழங்கிக் கொண்டே இருப்போம் என்பது மேற்கண்ட வசனத்தின் விளக்கமாகும்.

(தஃப்ஸீர் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை), தொகுதி 3 பக்கம் 626)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் وَالَّذِيْنَ جَاهَدُوْا فِيْنَا என்ற வசனத்தின் அடிப்படையில் நமக்கு பல்வேறு கோணங்களில் அறிவுரை வழங்கியுள்ளார்கள். மேலும் ஞானத்தின் வாசல்களை திறந்து கொடுத்துள்ளார்கள் என்று நான் ஏற்கனவே கூறியிருந்தேன். இது தொடர்பாக ஓரிடத்தில் மனித இயல்பின் சித்திரத்தை வரைந்து அன்னார் (அலை) விரிவாக எடுத்துரைத்துள்ளார்கள். மனிதன் ஒரு நிலையில்

நிரந்தரமாக நிலைபெற்றிருக்க முடியாது. மனித இயல்பில் ஏற்ற இறக்கம் வந்து கொண்டே இருக்கும். ஆயினும் நற்பேறு பெற்ற மக்கள் மற்றும் நல்லியல்பு பெற்ற மக்கள் தமது பலவீனமான நிலையிலிருந்து படிப்பினை பெறுகின்றனர். தவ்பா மற்றும் இஸ்திஃபார் செய்கின்றனர். அல்லாஹ்வின் முன்னால் குனிகின்றனர். தமது நிலைகளின் மீது வெட்கம் கொண்டு பின்னர் அல்லாஹ்வை தேடுவதில் ஜிஹாத் செய்வதற்காக எழுந்து நிற்கின்றனர். பின்னர் அல்லாஹ்வின் நேசத்தில் உத்வேகம் வந்து விடுகின்றது. இறைவனது மன்னிப்பும் உத்வேகம் கொள்கின்றது. மேலும் அவன் தனது அடியாரின் பக்கம் ஓடி வந்து விடுகின்றான். மேலும் அவருக்கு தூய்மை மற்றும் நன்மைக்கான ஆற்றலை வழங்குகின்றான்.

மனிதனிடத்தில் அல்லாஹ்வின் அருளால் தூய்மை மற்றும் நன்மைக்கான ஆற்றல் உருவாகி விடும்போது பின்னர் அவரது ஒவ்வொரு செயலும் இறைதிருப்தியை பெறக் கூடியதாக ஆகி விடுகின்றது. எல்லா வகையான பலவீனம் மற்றும் சோம்பலிலிருந்து அவர் தூய்மையாகி விடுகின்றார். இறையச்சத்தின் வழிகளில் வழிநடப்பவராக அவர் ஆகி விடுகின்றார். மேலும் அவர் பாவங்களிலிருந்தும் காப்பாற்றப்படுகின்றார். பின்னர் அல்லாஹ்வின் எப்படிப்பட்ட திருப்தியை பெறக் கூடியவராக அந்த மனிதர் ஆகிவிடுகின்றார் என்றால் அந்நிலையில் இறைவனை கோபத்திற்குள்ளாக்கக் கூடிய தவறுகள் எதுவும் அவரிடமிருந்து வெளிப்படுவதே கிடையாது.

அன்னார் (அலை) அவர்கள் கூறினார்கள்: ஆயினும் நினைவிற் கொள்ளுங்கள். இந்த நிலையை அடைவதற்கு நிரந்தர மனப்பான்மையுடன் உழைக்க வேண்டியது அவசியம் ஆகும். தற்காலிக உழைப்பு போதுமானதல்ல. நிரந்தர உழைப்பிற்கு அவசியம் உள்ளது. பின்னர் இந்த நன்மைகளும், துஆ ஒப்புக் கொள்ளப்படுகின்ற காட்சிகளும் வாழ்க்கையின் அங்கமாக ஆகி விடுகின்றன.

பின்னர் ஓரிடத்தில் அன்னார் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: எவர் எமது வழியில் கடுமையாக முயற்சி செய்வாரோ அவருக்கு நிச்சயம் நாம் எமது வழிகளை காட்டிக் கொடுத்து விடுவோம் (என்று அல்லாஹ் கூறுகின்றான்). இது ஒரு வாக்குறுதியாகும். மற்றொரு பக்கம் இறைவன் நமக்கு اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ என்ற துஆவையும் கற்றுக் கொடுத்துள்ளான். எனவே இதனை கருத்தில் கொண்டு தொழுகையில் மனிதன் உருக்கத்துடன் துஆ செய்ய வேண்டும். மேலும் முன்னேற்றம் மற்றும் அகப்பார்வையை பெற்று விட்ட மக்களைச் சார்ந்தவர்களாக தானும் ஆகி விட வேண்டுமென்றும், இவ்வுலகிலிருந்து பார்வையற்றவராகவும், குருடராகவும் எழுப்பப்படக் கூடிய மனிதனாக தான் இருக்கக் கூடாது என்றும் மனிதன் ஆசை கொள்ள வேண்டும்.

(மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 20 – 1984 ஆம் ஆண்டு அச்சிடப்பட்டது)

எனவே இந்த அந்தஸ்தை பெறுவதற்காக எங்கு அல்லாஹ் தனது அடியார்களை தனது வழியின் பக்கம் வழிகாட்டுகின்றானோ அங்கு இந்த துஆவும் அவசியமாகும். சூரா ஃபாத்திஹா ஓதும்போது اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ என்ற துஆவை மீண்டும் மீண்டும் ஓத வேண்டும். காதியானைச் சார்ந்த ஒருவர் ஒரு சம்பவத்தை கூறியுள்ளார். ஒரு பெரியவர் தொழும்போது அவரின் நிலைமை எவ்வாறு இருந்தது என்று அவர் கூறியுள்ளார். கூறுகின்றவர் கூறுகின்றார்: ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் ஒரு சஹாபி மஸ்ஜிது முபாரக்கில் ஒரு மூலையில் நின்று கொண்டிருந்தார்கள். மேலும் தொழுது கொண்டிருந்தார்கள். மிக அச்சத்திற்குரிய நிலை அன்னாரிடம் உருவாகி இருந்தது. தொழுகையில் உருக்கமான நிலையும் ஏற்பட்டிருந்தது. நீண்ட நேரம் வரை கைகளை கட்டிக் கொண்டு நின்று கொண்டிருந்தார்கள்.

கூறுகின்றவர் கூறுகின்றார்: அப்போது சென்று பார்க்க வேண்டும் என்ற அச்சம் எனக்கு உருவானது. ஏனென்றால் மிக மெல்லிய குரல் தான் வந்து கொண்டிருந்தது. அவர் என்ன ஓதிக் கொண்டிருக்கின்றார் என்று அருகில் சென்று பார்த்தபோது அன்னார் اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ என்று மீண்டும் மீண்டும் ஓதிக் கொண்டிருந்தார்கள். அன்னாரிடம் உருக்கமான நிலை உருவாகி இருந்தது. ஆக இது எப்படிப்பட்ட துஆ என்றால் அதனை மனிதன் தனது நேர்வழிக்காக அதிகமாக ஓதிக் கொண்டிருக்க வேண்டும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: இது அல்லாஹ்வின் உண்மையான வாக்குறுதியாகும். அதாவது எவர் உண்மையான உள்ளத்துடனும், நல்லெண்ணத்துடனும் அவனது வழியை தேடுகின்றாரோ அந்த நபருக்கு நேர்வழி மற்றும் இறைஞானத்தின் வழிகளை இறைவன் திறந்து கொடுத்து விடுகின்றான். நான் ஏற்கனவே கூறியதுபோன்று அல்லாஹ் இவ்வாறு கூறியுள்ளான்:

وَالَّذِيْنَ جَاهَدُوْا فِيْنَا لَنَهْدِيَنَّهُمْ سُبُلَنَا

அதாவது எந்த மக்கள் எமது வழியில் நின்று கடும் முயற்சி செய்வார்களோ அப்படிப்பட்ட மக்களுக்கு நாம் எமது வழிகளை திறந்து கொடுக்கின்றோம். எமது வழியில் நின்று கொண்டு என்பதன் பொருள், தூய்மை மற்றும் நல்லெண்ணத்தின் அடிப்படையில் இறைவனை அடைவதை தனது நோக்கமாக வைத்து அவர் இந்த முயற்சியை செய்கின்றார் என்பதாகும். அதாவது நாம் இறைவனையே அடைய வேண்டும் என்று அவர் முயற்சி செய்கின்றார். வேறு எந்த உலக நோக்கமும் அவருக்கு இருப்பதில்லை. அசல் விஷயம் இறைவனே அவரது நோக்கமாக இருக்கின்றது. தூய்மையுடன் இறைவனை அடைவது அவரது நோக்கமாக உள்ளது.

அன்னார் (அலை) கூறினார்கள்: ஆனால் ஒருவர் ஏளனம் மற்றும் எள்ளிநகையாடுதலின் வழிகளில் இறைவனை சோதித்து பார்க்கின்றார் என்றால் பின்னர் அந்த துர்பாக்கியம் பெற்ற மனிதர் இழப்பிற்குரியவராக ஆகி விடுகின்றார்.

அன்னார் (அலை) கூறினார்கள்: எனவே இதே தூய விதிமுறையின் அடிப்படையில் நீங்கள் உண்மையான உள்ளத்துடன் முயற்சி செய்யுங்கள். மேலும் துஆ செய்து வாருங்கள். அவ்வாறு செய்தால் இறைவன் பாவங்களை மன்னிப்பவனும், மீண்டும் மீண்டும் கருணை காட்டுபவனும் ஆவான். ஆனால் ஒருவர் அல்லாஹ்வை பொருட்படுத்தவில்லையென்றால் பின்னர் அவன் தேவையற்றவன் ஆவான்.

(மல்ஃபூஸாத் தொகுதி 6 பக்கம் 439 – 1984 ஆம் ஆண்டு அச்சிடப்பட்டது)

அதாவது அல்லாஹ்வும் உங்களை எந்த வகையிலும் பொருட்படுத்த மாட்டான்.

பின்னர் அன்னார் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: உலகில் எவ்வளவு வியாபாரங்கள் உள்ளனவோ அவை அனைத்திலும் மனிதனுக்கு முதலில் ஏதாவது ஒரு முயற்சியை செய்ய நேரிடுகின்றது. அதாவது உலகில் என்ன என்ன வியாபாரங்கள் இருக்கின்றனவோ அவற்றில் மனிதன் முதலில் முயற்சி செய்கின்றான். உலகப் பணிகளிலும் நீங்கள் பாருங்கள். இதே உதாரணங்கள் தான் உலகில் உள்ளன. மனிதன் கை, கால்களை அசைக்கின்றபோது பின்னர் அல்லாஹ்வும் பரக்கத் வழங்கி விடுகின்றான். இதேபோன்று இறைவனின் வழியிலும் கடுமையாக முயற்சி செய்கின்ற மக்களே சிறப்பை பெறுகின்றனர்.

எனவே அல்லாஹ் கூறியுள்ளான்:

وَالَّذِيْنَ جَاهَدُوْا فِيْنَا لَنَهْدِيَنَّهُمْ سُبُلَنَا

எனவே முயற்சி செய்ய வேண்டும். ஏனென்றால் முயற்சியே வெற்றிகளுக்கான வழியாகும்.

(மல்ஃபூஸாத் தொகுதி 7 பக்கம் 224 – 1984 ஆம் ஆண்டு அச்சிடப்பட்டது)

எனவே நாம் உலக விஷயங்களை பெறுவதற்காக நமது முயற்சிகளை உச்சத்தை அடையச் செய்து விடுகின்றபோது இறைவனை அடைவதற்காக அவனது வழிகளை பெறுவதற்காக உச்சபட்ச முயற்சிகளை நாம் ஏன் செய்யக் கூடாது? அவ்வாறிருக்க, சில விஷயங்கள் நாம் நாவினால் கூறுவதால்


**நபிமொழியிலிருந்து...**

சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)

S.S.H.Muhammed Lebbai
(Ameer, Melapalayam)

**திருக்குர்ஆனிலிருந்து...**

நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன். (51:57)

A.Nasir Ahmad
(Naib Ameer, Melapalayam)

**திருக்குர்ஆனிலிருந்து...**

அவர்கள் இரவு நேரத்தில் குறைவாகவே துயில் கொண்டனர். (54:18)

A.Shamsul Alam
(Gen.Sec. Melapalayam)

அல்லாஹ் நமக்கு கிடைத்து விடுவான் அல்லது நமது துஆக்களை ஒப்புக் கொண்டு விடுவான் என்று நாம் எவ்வாறு கருத முடியும்? எனவே இங்கு மீண்டும் அதே விஷயம் வந்து விடுகிறது. அதாவது எங்களது துஆக்கள் ஒப்புக் கொள்ளப்படவில்லை என்று கூறுகின்ற மக்கள் முதலில் தங்களை ஆய்வு செய்து பார்க்க வேண்டும். அல்லாஹ்வை அடைவது எளிமையானதாகவும் உலகப் பொருட்களை அடைவதற்காக உழைப்பின் விதிமுறையை கருத்தில் கொள்ள வேண்டும் என்பதும் பொருத்தமாக இருக்காது. பின்னர் இந்த விதிமுறை எல்லா இடங்களிலும் செயல்படும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மற்றோர் இடத்தில் அல்லாஹ்வை அடைவதற்கு உழைப்பின் அவசியம் உள்ளது என்ற கருத்தை எடுத்துரைத்தவாறு இவ்வாறு கூறுகின்றார்கள்:

எந்த மக்கள் எமது வழியில் முயற்சி செய்கின்றார்களோ இறுதியில் அவர்கள் எமது வழிகாட்டுதலால் எம்மை அடைந்து விடுகின்றனர். விதை விதைத்து விட்டு முயற்சியின்றியும், தண்ணீர் பாய்ச்சாமலும் இருப்பதால் அது அருளற்றதாக இருக்கும். இன்னும் கூறப்போனால் அது சுயமே அழிந்து விடும். அதேபோன்று நீங்கள் இந்த விஷயத்தை தினமும் நினைவிற் கொள்ளவில்லையென்றால், மேலும் இறைவா! எங்களுக்கு உதவி செய்வாயாக. மேலும் அருள் செய்வாயாக என்று துஆ செய்யவில்லையென்றால் இறை அருள் கிடைக்காது. இறை உதவியின்றி மாற்றம் சாத்தியமற்றதாகும்.

(மல்ஃபூஸாத் தொகுதி 7 பக்கம் 225 – 1984 ஆம் ஆண்டு அச்சிடப்பட்டது)

எனவே இதுவே இயற்கை சட்டமாகும். அல்லாஹ்வை அடைவதற்கும் இது அவசியமாகும். எவ்வாறு ஒரு விவசாயி விதை விதைத்து விட்டு அமர்ந்து விடுவதில்லையோ அதேபோன்று இங்கும் மனிதன் அவ்வாறு அமர்ந்து விடக் கூடாது. அதாவது நான் ஈமான் கொண்டு விட்டேன். நான் ஒப்புக் கொண்டு விட்டேன் என்று கூறிக் கொண்டு அமர்ந்து விடுவதால் ஒன்றும் நடக்காது. மாறாக, முயற்சி செய்ய வேண்டும். தமது ஈமானிய செடிகளை கண்காணித்து வர வேண்டும்.

பின்னர் அன்னார் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: எவர் அல்லாஹ்வின் பக்கம் திரும்புவாரோ அல்லாஹ்வும் அவரின் பக்கம் கவனம் செலுத்துவான். ஆயினும் எந்த அளவிற்கு முடியுமோ அந்த அளவிற்கு அடியார் தன் புறமிருந்து தவறிழைக்காமல் இருப்பது அவசியமாகும். அவரது முயற்சி தனது உச்சத்தை அடைந்து விடும்பொழுது பின்னர் அவர் இறைவனின் ஒளியை கண்டு கொள்வார்.

وَالَّذِيْنَ جَاهَدُوْا فِيْنَا لَنَهْدِيَنَّهُمْ سُبُلَنَا

என்பதில் அல்லாஹ் இதனை கூறியுள்ளான். இந்த வசனத்தில் இந்த விஷயத்தின் பக்கம் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. முயற்சிக்கான என்ன உரிமை அவரது பொறுப்பில் உள்ளதோ அதை அவர் செலுத்த வேண்டும். தண்ணீர் 20 அடிக்கு கீழே தோண்டுவதால் வெளிப்படும் என்ற நிலையில் அவர் இரண்டு அடி தோண்டி விட்டு சோர்ந்து விடக் கூடாது. 20 அடி அல்லது 30 அடி தோண்டுவதால் தண்ணீர் வரும் என்றால் பின்னர் 2, 4 அடி தோண்டி விட்டு தண்ணீர் வரவில்லை என்று அமர்ந்து விடக் கூடாது.

அன்னார் (அலை) கூறினார்கள்: ஒவ்வொரு பணியிலும் தைரியம் இழக்காமல் இருப்பதே அதன் வெற்றியின் ஆணி வேர் ஆகும்.

பின்னர் இந்த சமுதாயத்திற்கு அல்லாஹ்வின் இந்த வாக்குறுதி உள்ளது. ஒருவர் முழுமையான முறையில் துஆ மற்றும் மனத்தூய்மையால் பணி செய்வார் என்றால் பின்னர் திருக்குர்ஆனின் அனைத்து வாக்குறுதிகளும் அவருடன் முழுமையடைந்தே தீரும். எவர் தைரியத்துடன் முழுமையான முறையில் துஆ மற்றும் மனத்தூய்மையுடன் பணி செய்வாரோ, திருக்குர்ஆனின் அனைத்து வாக்குறுதிகளும் அவருக்கு முழுமையடைந்தே தீரும். ஆயினும் எவர் இதற்கு எதிராக இருப்பாரோ அவர் இழப்பிற்குரியவராக இருப்பார். ஏனென்றால், இறைவனது இருப்பு தன்மானமிக்கதாகும். அவன் தன் புறமிருந்து தன் பக்கம் வருவதற்கான வழியை நிச்சயம் வைத்துள்ளான். ஆயினும் அதன் வாசல்களை குறுகியதாக ஆக்கியுள்ளான். எவர் கசப்பான பானத்தை அருந்துவாரோ அவரே அதனை வந்தடைகின்றார். உழைக்க நேரிடும். மக்கள் உலகத்தின் கவலையில் வேதனையை சகித்துக் கொள்கின்றனர்.

அன்னார் (அலை) கூறினார்கள்: மக்கள் உலகத்தின் கவலையில் வேதனையை சகிக்கின்றனர். எந்த அளவுக்கென்றால் சிலர் அதிலேயே மாண்டு விடுகின்றனர். ஆயினும் அல்லாஹ்விற்காக ஒரு முள்ளின் வேதனையை கூட சகித்துக் கொள்வதை விரும்புவதில்லை. எதுவரை மனிதன் புறமிருந்து உண்மையும், பொறுமையும், நன்றியுணர்வின் அடையாளங்களும் வெளிப்படுவதில்லையோ அதாவது அடியார் புறமிருந்து உண்மை, பொறுமை மற்றும் நன்றியுணர்வின் அடையாளங்கள் வெளிப்படவில்லையென்றால் அல்லாஹ்வின் புறமிருந்தும் கருணையின் அடையாளங்கள் வெளிப்படுவதில்லை.

அன்னார் (அலை) கூறினார்கள்: இறைவன் புறமிருந்து கருணையின் அடையாளங்கள் இவ்வாறே வெளிப்படுகின்றன.

(மல்ஃபூஸாத் தொகுதி 7 பக்கம் 291 – 1984 ஆம் ஆண்டு அச்சிடப்பட்டது)

பின்னர் நாங்கள் அதிகமாக துஆ செய்தோம். துஆ ஒப்புக் கொள்ளப்படவில்லை என்று கூறுகின்ற மக்களின் கேள்விகளுக்கான பதில் இதுவாகும். அவர்கள் ஒரு வகையில் இறைவனை நிர்பந்திக்கின்றார்கள். நாங்கள் எங்களது விருப்பப்படியே வருவோம். தேவை இருக்கும்போதுதான் வருவோம். மேலும் இறைவன் நவூதுபில்லாஹ் எங்களுக்கு கட்டுப்பட்டவன். நாங்கள் என்ன கூறுவோமோ, எதனை விரும்புவோமோ அதை அவன் செய்ய வேண்டும். எங்கள் துஆவை அவன் ஒப்புக் கொள்ள வேண்டும் என்று அவர்கள் விரும்புகின்றனர். ஆனால் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுவதுபோன்று இந்த விஷயம் உலக சட்டங்கள் மற்றும் தொடர்புகளில் கூட அவ்வாறு நடப்பதில்லை. அவ்வாறிருக்க இறைவனுடனான விவகாரங்களில் நாங்கள் விரும்புகின்றபடியே நடக்க வேண்டும். உழைப்பின்றி பணி நடந்து விட வேண்டும் என்று எவ்வாறு எதிர்பார்க்கப்படுகின்றது? எனவே இங்கு இதுவே கூறப்பட்டுள்ளது. அதாவது தூயவர்களாக திகழ்ந்து அல்லாஹ்வின் பக்கம் வாருங்கள். அவ்வாறு செய்தால் பின்னர் அவனது அன்பின் காட்சிகளை நீங்கள் பார்ப்பீர்கள்.

பின்னர் அன்னார் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: நினைவிற் கொள்ளுங்கள். நற்செயல் இல்லாத ஈமான் எப்படிப்பட்டதென்றால் ஆறுகள் இல்லாத தோட்டத்தைப் போன்றதாகும். அதாவது நதிகள் இல்லாத தோட்டம் ஆகும். தண்ணீர் இல்லாத ஒரு தோட்டம் ஆகும். ஒரு தோட்டத்திற்கு அதன் எஜமானர் தண்ணீர் பாய்ச்சுவதன் பக்கம் கவனம் செலுத்தவில்லையென்றால், ஒரு நாள் அது காய்ந்து விடும். ஈமானின் நிலையும் அதேபோன்றதாகும்.

وَالَّذِيْنَ جَاهَدُوْا فِيْنَا அதாவது நீங்கள் சின்னச்சின்ன பணியில் நின்று விடாதீர்கள். மாறாக, இறை வழியில் பெரும் பெரும் முஜாஹிதா (கடின உழைப்பு) அவசியமாகும். மனித உள்ளம் காளை மாட்டுடன் ஒப்புமை வழங்கப்பட்டுள்ளது.

(தஃப்ஸீர் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை), தொகுதி 3 பக்கம் 631)

எனவே وَلْيُؤْمِنُوْا بِيْ என்று அல்லாஹ் கூறுகின்றான். என்னை அழைப்பவர் என் மீது ஈமான் கொள்ள வேண்டும். அந்த ஈமான் என்பது என்னவென்றால், அல்லாஹ்விற்குரிய உரிமைகள் அடியார்களுக்குரிய உரிமைகள் மற்றும் அல்லாஹ்வின் மீதான ஈமானுக்குரிய உரிமைகள் ஆகியவற்றை செலுத்த வேண்டும். அல்லாஹ் ஈமானின் தோட்டத்தை பராமரிப்பதற்கும், கண்காணிப்பதற்கும் தனது அடியார்களிடம் கூறியுள்ளான். நாம் நமது வீட்டிலும் பார்க்கின்றோம். செடிகளை நாம் தொடர்ந்து பராமரிக்கவில்லையென்றால் அதை கருத்தில் கொள்ளவில்லையென்றால் அவை காய்ந்து விடுகின்றன. அவ்வாறிருக்க ஈமானிய தோட்டத்தை நாம் எந்த அளவிற்கு கண்காணிக்க வேண்டும். மேலும் அதனை கண்காணிக்காமல் எவ்வாறு விட்டு விட முடியும்?

பின்னர் மற்றொரு கோணத்தில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இந்த விஷயத்தை இவ்வாறு எடுத்துரைக்கின்றார்கள்: அல்லாஹ் கூறுகின்றான்: எமது வழியில் கடுமையான முயற்சிகளை நீங்கள் செய்ய

---

**திருக்குர்ஆனிலிருந்து...**

(செவியேற்பவரே!) இப்ராஹீம் இவ்வாறு கூறிய நேரத்தை (நினைத்துப் பாரும்). என் இறைவா! இந்த (மக்கா) நகரத்தை அமைதிக்குரியதாக்கி வைப்பாயாக. நாங்கள் பொய் தெய்வங்களை வணங்குவதிலிருந்து என்னையும், என் சந்ததிகளையும் காப்பாயாக. (14:36)

A.Basheer Ahmad
(Sec. Waqf-e-Jadid, Melapalayam)

வேண்டும். இதன் பொருள் என்னவென்றால், தூதருடன் நீங்கள் இணைந்து முயற்சிகளை செய்ய வேண்டும். ஒன்றிரண்டு மணி நேரத்திற்குப் பிறகு ஓடி விடுவது முஜாஹித்களின் பணியல்ல. மாறாக, உயிரை அர்ப்பணிப்பதற்கு தயாராக இருப்பதே அவரின் பணியாகும். எனவே இறையச்சமுடையவரின் அடையாளம் உறுதிப்பாடாகும்.

(மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 25 – 1984 ஆம் ஆண்டு அச்சிடப்பட்டது)

எனவே நாம் நமது பைஅத் உடன்படிக்கையில் நாங்கள் உலகத்தை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை வழங்குவோம் என்ற உறுதிமொழியை எடுத்துள்ளோம். அவ்வாறிருக்க இந்த உறுதியில் நிலைநிற்பதற்காக இந்த விஷயத்திற்கு அவசியம் உள்ளது. அதாவது மார்க்கம் நம்மிடம் என்ன எதிர்பார்க்கின்றது? எதனை நாம் முன்னிலைப்படுத்த வேண்டும்? என்று நாம் பார்க்க வேண்டும். பின்னர் அதன் மீது உறுதியான மனப்பான்மையுடன் நிலைநிற்கவும் வேண்டும்.

பின்னர் அன்னார் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: எந்த நபர் அல்லாஹ்வின் மீதான அச்சத்தின் காரணமாக மட்டும் அவனது வழியை தேடுவதில் முயற்சி செய்வாரோ மேலும் அந்த விவகாரத்தில் எளிமை கிடைப்பதற்காக அவனிடம் துஆ செய்வாரோ பின்னர் அவருக்கு அல்லாஹ் وَالَّذِيْنَ جَاهَدُوْا فِيْنَا لَنَهْدِيَنَّهُمْ سُبُلَنَا (அதாவது எவர்கள் எம் வழியில் முயற்சி செய்கின்றார்களோ நாம் எமது வழிகளை அவருக்கு காட்டிக் கொடுப்போம்) என்ற தனது சட்டத்திற்கேற்ப சுயமே கைகளை பிடித்து தனது வழிகளை காட்டிக் கொடுத்து விடுகின்றான். அவருக்கு சாந்தியடைந்த ஆன்மாவை வழங்கி விடுகின்றான்.

உள்ளம் சுயமே மகத்துவத்திலிருந்து வெளியேறியதகாவும், நாவு துஆவிலிருந்து விலகியதாகவும், கொள்கை ஷிர்க் மற்றும் பித்அத்கள் கலந்ததாகவும் இருந்தால் பின்னர் அது என்ன துஆ? மேலும் அவர் அந்நிலையில் என்ன வேண்டுதலை செய்கின்றார்? அதனால் அழகிய முடிவுகள் எவ்வாறு வெளிப்பட முடியும்?

(தஃப்ஸீர் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை), தொகுதி 3 பக்கம் 632)

எனவே நாம் இந்த எண்ணத்துடன் அல்லாஹ்வின் வழிகளை தேடிக் கொண்டிருக்கின்றோமா? நமது உள்ளம் அல்லாஹ் அல்லாதவற்றிலிருந்து முற்றிலும் வெறுமையாகி விட்டதா? என்று நாம் நம்மை நாமே ஆய்வு செய்து கொண்டிருக்க வேண்டும்.

பின்னர் தவ்பா மற்றும் இஸ்திக்ஃபாரின் பக்கம் கவனமூட்டியவாறு அன்னார் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: தவ்பா மற்றும் இஸ்திக்ஃபார் அல்லாஹ்வை அடைவதற்குரிய வழிமுறையாகும்.

وَالَّذِيْنَ جَاهَدُوْا فِيْنَا لَنَهْدِيَنَّهُمْ سُبُلَنَا என்று அல்லாஹ் கூறுகின்றான். முழுமையான முயற்சியுடன் அவனது வழியில் ஈடுபட்டு வாருங்கள். அவ்வாறு செய்தால் அடைய வேண்டிய இலக்கை அடைந்து விடுவீர்கள். அல்லாஹ் எவரிடமும் கருமித்தனம் காட்டுவதில்லை.

(மல்ஃபூஸாத் தொகுதி 10 பக்கம் 107)

அன்னார் (அலை) கூறினார்கள்: திருக்குர்ஆனின் போதனையின் மூலமாக நமக்கு இந்த விஷயம் தெரிய வருகின்றது. அதாவது ஒரு பக்கம் அல்லாஹ் திருக்குர்ஆனில் தனது கருணை, மென்மை போன்ற பண்புகளை எடுத்துரைத்துள்ளான். மேலும் தான் ரஹ்மான் என்பதை வெளிப்படுத்தியுள்ளான். மற்றொரு பக்கம் அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான்:

اَنْ لَّيْسَ لِلْاِنْسَانِ اِلَّا مَا سَعٰى

وَالَّذِيْنَ جَاهَدُوْا فِيْنَا لَنَهْدِيَنَّهُمْ سُبُلَنَا

இவ்வாறு தனது அருளானது, முயற்சி மற்றும் உழைப்பை அடிப்படையாகக் கொண்டது என்று அல்லாஹ் கூறியுள்ளான். மேலும் இதில் சஹாபா பெருமக்களின் செயல் வடிவம் நம் அனைவருக்கும் ஓர் அழகிய முன்மாதிரியாகவும், சிறந்த முன்னுதாரணமாகவும் உள்ளது. சஹாபிகளின் வாழ்க்கையை சீர்தூக்கிப் பாருங்கள். அவர்கள் சாதாரண தொழுகைகளால் மட்டும் அந்த அந்தஸ்தை, படித்தரங்களை அடைந்து விட்டார்களா? இல்லை. மாறாக, அவர்கள் அல்லாஹ்வின் திருப்தியை பெறுவதற்காக தமது உயிரைக் கூட பொருட்படுத்தவில்லை. மேலும் ஆடுகளைப் போன்று இறை வழியில் குர்பான் ஆகி விட்டார்கள். அதன் பிறகு தான் அவர்களுக்கு அந்த அந்தஸ்து கிடைத்துள்ளது.

அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: பெரும்பாலான மக்களை நாம் இவ்வாறு பார்க்கின்றோம். ஒரு மந்திரத்தில் தங்களுக்கு அந்த அந்தஸ்துகள் கிடைத்து விட வேண்டும் என்றும், இறை சன்னிதானத்தை அடைந்து விட வேண்டும் என்றும் அவர்கள் விரும்புகின்றார்கள்.

(மல்ஃபூஸாத் தொகுதி 10 பக்கம் 205 – 1984 ஆம் ஆண்டு அச்சிடப்பட்டது)

அவ்வாறு நடைபெற முடியாது.

நிச்சயமாக அல்லாஹ் ரஹீம் ஆகவும், கரீம் ஆகவும் இருக்கின்றான். ஆனால் அத்துடன் அவன் முழுமையான ஈமானை பெற்ற மக்களாக ஆகுவதற்கு இறைவனின் வழியில் ஜிஹாத் செய்யக் கூடியவராக இருக்க வேண்டும் என்ற நிபந்தனையை வகுத்துள்ளான். பின்னர் அல்லாஹ் அவரின் அந்தஸ்தை உயர்த்திக் கொண்டே செல்வான். துஆ ஒப்புக் கொள்ளப்படுவதற்கான அந்த காட்சிகளை அவர்கள் காண்கின்றனர். இறைவனின் ரஹ்மானிய்யத் மற்றும் ரஹீமிய்யத்தை முன்பை விட அதிகமாக பார்க்கின்றனர். சஹாபிகள் கண்ட காட்சிகளை அவர்களும் காண்கின்றனர். இறைநேசத்தில் அந்த சஹாபிகள் எவ்வாறு மூழ்கியிருந்தார்கள் என்றால் அதற்கு நிகரான உதாரணம் கிடைப்பதில்லை. அல்லாஹ்வின் வழியில் கொல்லப்பட்டு விட்டாலும் கூட அவர்கள் சொர்க்கங்கள் மற்றும் அல்லாஹ்வின் திருப்தியின் நற்செய்திகளை பெறக் கூடியவர்களாக ஆகி விட்டனர்.

பின்னர் அன்னார் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: எந்த மக்கள் இறை வழியில் அவனை அடைவதற்காக துடிப்புடனும், மன்றாடுதலுடனும் முயற்சி செய்கின்றார்களோ அவர்களின் உழைப்பும், முயற்சியும் வீணாகி விடுவதில்லை. நிச்சயம் அவர்களுக்கு வழிகாட்டப்படுகின்றது. எவர் ஒருவர் உண்மையுடனும், தூய எண்ணத்துடனும் இறைவனின் பக்கம் அடியெடுத்து வைக்கின்றாரோ இறைவன் அவர் பக்கம் வழிகாட்டுவதற்காக முன்னேறுகின்றான். ஆய்வு செய்வதும், உண்மையை தேடுவதில் உண்மையான துடிப்பையும், தாகத்தையும் தன்னுள் உருவாக்கிக் கொள்வதும் மனிதனின் கடமையாகும். அறிவை பரந்துபட்டதாக ஆக்கிக் கொள்வதற்கு அல்லாஹ் கூறியுள்ள வழிகளில் மனிதன் நிலைநிற்க வேண்டும். இறைவன் தேவையற்றவனாக இருக்கின்றான். எவர் இறைவனை பொருட்படுத்தவில்லையோ அவரை இறைவனும் பொருட்படுத்த மாட்டான்.

(மல்ஃபூஸாத் தொகுதி 10 பக்கம் 284 – 1984 ஆம் ஆண்டு அச்சிடப்பட்டது)

பின்னர் அன்னார் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: உங்களது உள்ளத்தின் மாறுதலுக்காக முயற்சி செய்யுங்கள். தொழுகையில் துஆக்களை வேண்டுங்கள். தான, தர்மங்களாலும், ஏனைய எல்லா வழிமுறைகளாலும் وَالَّذِيْنَ جَاهَدُوْا فِيْنَا என்ற வட்டத்தில் இணைந்து கொள்ளுங்கள். எவ்வாறு நோயாளி மருத்துவரிடம் செல்கின்றாரோ அதேபோன்று உங்களது ஆன்மீக நோய்களை அகற்றுவற்காக எல்லா வகையிலும் முயற்சி செய்யுங்கள். வெறும் நாவினால் மட்டுமல்ல. மாறாக, முயற்சிகள் செய்வதற்கு எந்த அளவிற்கு இறைவன் வழிமுறைகளை கூறியுள்ளானோ அவை அனைத்தையும் மேற்கொள்ளுங்கள்.

(மல்ஃபூஸாத் தொகுதி 8 பக்கம் 188 – 1984 ஆம் ஆண்டு அச்சிடப்பட்டது)

எனவே இதுவே அந்த வழிமுறைகள் ஆகும். இதன் மூலமே அல்லாஹ்வை பெறுவதற்கான வழிகள் திறந்து கொண்டே செல்கின்றன. பின்னர் துஆக்களின் பக்கம் கவனமும் ஊட்டப்படுகின்றன.

அன்னார் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: இந்த வாழ்க்கையை மிகவும் இழிவானதாக கருதி அதிலிருந்து வெளியேறுவதற்கு மனிதன் முயற்சி செய்ய வேண்டும். அதாவது இந்த உலக வாழ்க்கையே அனைத்தும் என கருதி விடக் கூடாது. மாறாக, இந்த உலக வாழ்க்கையை ஒரு தற்காலிகமானதாகவும், அசுத்தமானதாகவும் கருத வேண்டும். துஆவைக் கொண்டு செயல்பட வேண்டும். ஏனென்றால் திட்டங்களுக்கான உரிமைகளை மனிதன் வழங்கும்போது பின்னர் உண்மையான துஆக்களுடனும் பணி செய்கின்றான். அந்நிலையில் இறுதியில் அல்லாஹ் அவருக்கு இரட்சிப்பை வழங்கி விடுகின்றான். பாவத்தின் வாழ்க்கையிலிருந்து வெளியேற்றி விடுகின்றான். ஏனென்றால், துஆ என்பது சாதாரண விஷயம் ஒன்றும் அல்ல. மாறாக, அதுவும் ஒரு (வகை) மரணமே ஆகும். மனிதன் அந்த மரணத்தை ஏற்றுக் கொண்டு விடும்பொழுது இறைவன் அவரை குற்றம் நிறைந்த வாழ்க்கையிலிருந்து அதாவது மரணத்திற்கு காரணமான குற்றம் நிறைந்த

வாழ்க்கையிலிருந்து காப்பாற்றி விடுகின்றான். மேலும் அவருக்கு ஒரு தூய வாழ்க்கையை வழங்குகின்றான்.

அன்னார் (அலை) கூறினார்கள்: ஏராளமான மக்கள் துஆவை ஒரு சாதாரண விஷயமாக கருதுகின்றனர். எனவே நினைவிற் கொள்ள வேண்டும். சாதாரணமாக தொழுகையில் ஒன்றை ஓதி விட்டு, கையை உயர்த்தி விட்டு அமர்ந்து விடுவது, மேலும் வாயில் வந்ததையெல்லாம் கூறி விடுவது ஆகியவற்றையே துஆ என்று கருதக் கூடாது. அந்த துஆவால் எந்த நன்மையும் இல்லை. ஏனென்றால் அந்த பெயரளவிலான துஆ வெறும் மந்திரத்தைப் போன்று இருக்கின்றது. அந்த நபரின் உள்ளம் இணைவதில்லை. மேலும் அவருக்கு அல்லாஹ்வின் வல்லமைகள் மற்றும் ஆற்றல்கள் மீது எந்த நம்பிக்கையும் இருப்பதில்லை.

நினைவிற் கொள்ளுங்கள். துஆ ஒரு மரணம் ஆகும். எவ்வாறு மரண நேரத்தில் ஒரு வேதனையும், பரிதவிப்பும் இருக்கின்றதோ அதேபோன்று துஆவின்போது அதே துன்பமும், உணர்வும் இருப்பது அவசியமாகும். எனவே துஆவில் முழுமையான உருக்கமும், மன்றாடுதலும் இல்லாத வரை விஷயம் முழுமையடைந்து விடாது. எனவே இரவில் எழுந்து எழுந்து மிகவும் உருக்கத்துடனும், மன்றாடுதலுடனும் இறைவனின் சந்நிதானத்தில் உங்களது கஷ்டங்களை முன் வையுங்கள். ஒரு மரணம் ஏற்பட்டு விட்டதை போன்ற நிலையை அந்த துஆவில் எட்டி விடுங்கள். அப்போது துஆ, ஒப்புக் கொள்ளப்படுவதற்கான அந்தஸ்தை அடைந்து விடுகின்றது.

அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: இதனையும் நினைவிற் கொள்ளுங்கள். எல்லாவற்றையும் விட முதன்மையான மற்றும் அவசியமான துஆ இதுவாகும். அதாவது மனிதன் தன்னை பாவங்களிலிருந்து தூயவனாக ஆக்குவதற்காக துஆ செய்ய வேண்டும். அனைத்து துஆக்களின் அசலும், அங்கமும் இதே துஆ ஆகும். ஏனென்றால் இந்த துஆ ஒப்புக் கொள்ளப்பட்டு விட்டால் பின்னர் மனிதன் எல்லா வகையான அசுத்தங்களிலிருந்தும், கறைகளிலிருந்தும் தூயவனாக மாறி இறைவனின் பார்வையில் பரிசுத்தமானவனாக ஆகி விடுவான். அவ்வாறு ஆகி விட்டால் பின்னர் தனது அவசிய தேவைகள் தொடர்பான துஆக்களை மனிதனுக்கு செய்வதற்கு அவசியமே ஏற்படாது. அவை சுயமே ஒப்புக் கொள்ளப்பட்டுக் கொண்டே இருக்கும். மிகவும் கடினமான மற்றும் உழைப்பை அடிப்படையாகக் கொண்ட துஆ என்பது மனிதன் பாவங்களிலிருந்து தூய்மையாகி விட வேண்டும் என்ற துஆவே ஆகும்.

மாபெரும் துஆ இதுவே ஆகும். மனிதன் பாவங்களிலிருந்து தூயவனாக ஆகி விட வேண்டும். இறைவனது பார்வையில் தான் இறையச்சமுடையவனாகவும், நல்லடியாராகவும் ஆக வேண்டும் என்று மனிதன் துஆ செய்ய வேண்டும். அதாவது எல்லாவற்றையும் விட முதலில் மனிதனின் உள்ளத்தில் இருக்கும் அந்த திரையை அகற்றுவது அவசியமாகும். அந்த திரை அகன்று விட்டால் ஏனைய திரைகளை அகற்றுவதற்காக பெரும் பெரும் முயற்சிகளையும், கஷ்டங்களையும் மேற்கொள்ள அவசியம் இருக்காது. ஏனென்றால் இறைவனின் அருள் அவருக்கு ஆதரவாக சூழ்ந்து கொண்டு ஆயிரக்கணக்கான சீர்கேடுகளை சுயமே அகன்று கொண்டு செல்ல செய்து விடும். மேலும் உள்ளத்தில் தூய்மையும், பரிசுத்தமும் உருவாகி விடும்போது அல்லாஹ்வுடன் உண்மையான தொடர்பும் உருவாகி விடுகின்றது. பின்னர் அல்லாஹ் சுயமே அவர்களது பாதுகாவலனாகவும், பொறுப்பாளனாகவும் ஆகி விடுகின்றான். அந்த அடியார் தனது தேவைகளை அல்லாஹ்விடம் வேண்டுவதற்கு முன்பாகவே அல்லாஹ் சுயமே அவற்றை நிறைவேற்றி விடுகின்றான்.

இது ஒரு நுட்பமான இரகசியாகும். இது தற்போது திறந்துள்ளது. இது மிக, மிக நுட்பமான இரகசியமாகும். மனிதன் அந்த இடத்தை அடையும்பொழுது அந்த இரகசியம் திறக்கின்றது. அதற்கு முன்பு அதனை அவர் புரிந்து கொள்வது கடினமாகும். ஆனால் இது ஒரு மகத்துவமிக்க முஜாஹிதாவைக் கொண்ட பணியாகும். ஏனென்றால், துஆவும் ஒரு முஜாஹிதாவை விரும்புகின்றது. எவர் துஆவிலிருந்து கவனற்றவராக இருக்கின்றாரோ மேலும் அதிலிருந்து விலகி இருக்கின்றாரோ அல்லாஹ்வும் அந்த நபரை பொருட்படுத்துவதில்லை. அவரிடமிருந்து இறைவன் விலகி விடுகின்றான். அவசரமும், வேகமும் இங்கு பயன்படாது. இறைவன் தனது அருளாலும், கருணையாலும் எதை விரும்புவானோ அதை வழங்குவான். அவன் விரும்பும்போது அருளுவான். இறைவன் உடனடியாக வழங்காததால் முறையீடு செய்வதும், தப்பெண்ணம் கொள்வதும் துஆ கேட்பவரின் பணியாக இருக்கக் கூடாது. மாறாக, உறுதிப்பாட்டுடனும், பொறுமையுடனும் வேண்டிக் கொண்டே செல்ல வேண்டும்.

(மல்ஃபூஸாத் தொகுதி 6 பக்கம் 406, 407 – 1984 ஆம் ஆண்டு அச்சிடப்பட்டது)

அல்லாஹ் நமக்கு இந்த விஷயங்களின்படி அமல் செய்யும் நற்பேறை வழங்குவானாக. மேலும் இந்த ரமலானை அல்லாஹ்வுடன் உறுதியான தொடர்பை ஏற்படுத்தக் கூடியதாக நமக்கு ஆக்கி விடுவானாக. மேலும் இறைவனின் கூற்றுகளின்படி அமல் செய்யக் கூடியவர்களாக நம்மை ஆக்குவானாக. அவன் மீது முழுமையான ஈமான் கொள்ளக் கூடியவர்களாக நம்மை ஆக்குவானாக. துஆ ஒப்புக் கொள்ளப்படுகின்ற காட்சிகளை காணக் கூடியவர்களாக நம்மை ஆக்குவானாக. இந்த நிலை எப்போதும் நிலைபெறக் கூடியதாக இருக்கட்டுமாக. ரமலானிலும், ரமலானிற்குப் பிறகும் அல்லாஹ்வின் தூய அடியாராக ஆகுவதற்குரிய உரிமைகளை நாம் செலுத்தக் கூடியவர்களாக இருப்போமாக. அல்லாஹ் நமக்கு தமது வழிகளை காட்டித் தந்துள்ளான். அந்த வழிகளிலிருந்து நாம் வழிதவறக் கூடியவர்களாக இருக்கக் கூடாது. எப்போதும் அவனது அன்பின் பார்வை நம் மீது விழுந்து கொண்டே இருக்கட்டுமாக. நாம் காலத்தின் இமாமிடம் செய்த பைஅத்தின் உரிமைகளை நிறைவேற்றக் கூடியவர்களாக நாம் திகழ்வோமாக. அல்லாஹ்வின் இந்த அருட்கொடையைப் பெற்று விட்டு பின்னர் ஒருபோதும் அதிலிருந்து இழப்பிற்குரியவர்களாக ஆகி விடக் கூடாது. அல்லாஹ் காலத்தின் இமாமை ஒப்புக் கொண்டதால் நமக்கு இந்த அன்பளிப்பை வழங்கியுள்ளான். அதிலிருந்து நாம் இழப்பிற்குரியவர்களாக ஆகி விடக் கூடாது.

நமது எதிரிகளின் தீங்கிலிருந்து எப்போதும் அல்லாஹ் நம்மை பாதுகாப்பாக வைப்பானாக. நமது துஆக்களை ஒப்புக் கொண்டவாறு எதிரிகளின் தீங்குகளை அவர்கள் பக்கமே திருப்புவானாக. ஜமாஅத்தின் முன்னேற்றத்திற்குரிய பாதையை அவன் எப்போதும் உருவாக்கிக் கொண்டே இருப்பானாக. எனவே இந்த ரமலானை உங்களது துஆக்கள் ஒப்புக் கொள்ளப்படுவதற்கான வழிமுறையாக ஆக்கிக் கொள்ளுங்கள். அல்லாஹ் நமக்கு அதற்கான நற்பேறை வழங்குவானாக.

உலகின் நிலைமைகளுக்காகவும் துஆக்கள் செய்யுங்கள். அல்லாஹ் உலகை அழிவிலிருந்து காப்பாற்றுவானாக. மேலும் தம்மைப் படைத்த இறைவனை அடையாளம் காண்பதற்கு அவர்களுக்கு அல்லாஹ் அறிவை வழங்குவானாக.

ஜுமுஆவிற்குப் பிறகு நான் MTA வின் ஒரு Website ஐ துவங்கி வைப்பேன். அதனை MTA International உருவாக்கியுள்ளது. அதன் Mobile Application ஐ உருவாக்கியுள்ளார்கள். அதில் 313 பத்ரி சஹாபிகளைப் பற்றிய எனது ஜுமுஆ குத்பாக்கள் ஒரிடத்தில் தொகுக்கப்பட்டுள்ளன. இந்த Website ல் ஜமாஅத் சகோதரர்கள் அதனை பார்ப்பது மட்டுமல்லாமல் பத்ரி சஹாபிகள் தொடர்பாக உருவாக்கப்பட்டுள்ள profile களையும் படிக்க முடியும். எதுவரை ஒருவர் அதனை பார்த்தும் படித்தும் இருப்பாரோ அதுவரை அதனை Book Mark–ம் செய்து கொள்ள முடியும். அதுமட்டுமின்றி ஒவ்வொரு சஹாபி பற்றியும் கேள்வி–பதிலைக் கொண்ட ஒரு வினாடி வினாவும் இடம் பெற்றுள்ளது. Website ல் சம்பந்தப்பட்ட பயனுள்ள பட்டியல்களையும் பார்க்க முடியும். பெயர்கள் மற்றும் கடினமான அரபிச் சொற்களின் உச்சரிப்பையும் கேட்க முடியும். இதுவரை Upload செய்யப்பட்டுள்ள தகவல் மட்டுமின்றி எதிர்வரும் நாட்களிலும் புதிய தகவல்களும், வீடியோக்களும் ஒவ்வொரு வாரமும் அதில் பதிவேற்றம் செய்யப்படும். Website ன் முகவரி இவ்வாறாகும். www.313companions.org

நான் கூறியதுபோன்று தொழுகைக்குப் பிறகு அது துவக்கி வைக்கப்படும். அல்லாஹ் இதனையும் மக்களுக்கு நன்மையின் காரணியாக ஆக்குவானாக.

(தமிழாக்கம்: மவ்லவி அப்துர் ரஹ்மான் தாஹிர்)

O.A. NIJAM 99947 57172 V.A. SAIT 99430 30230

DOORS & STEELS EXPERT

O.A.N. DOORS & STEELS



All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Con-

5C/6-A, Ambai Road, Kulavanikarpuram,
(opp. Karuna Clinic) Tirunelveli - 627 005.

## ஸய்யிதுனா அமீருல் மூமினீன் ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் ஜப்பான் சுற்றுப் பயணம் – 2013

**சென்ற இதழின் தொடர்ச்சி...**

### தனி நபர் மற்றும் குடும்ப சந்திப்பு

மாலை 6:45 மணியளவில் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் நிகழ்ச்சி நிரலுக்கேற்ப அனைவரையும் சந்திப்பதற்கு வருகை தந்தார்கள். மேலும் குடும்பத்தினருடனான சந்திப்பு நிகழ்ச்சி தொடங்கியது. இன்று சந்திப்பின் இந்த அமர்வில் 24 குடும்பங்களைச் சார்ந்த 87 நபர்கள் தமது அன்பிற்குரிய எஜமானரை சந்திக்கும் நற்பேறை பெற்றார்கள். இன்று சந்தித்தவர்களில் இந்தோனேஷியா மற்றும் கொரியாவிலிருந்து வருகை தந்திருந்த விருந்தினர்களும் அடங்குவர்.

ஜப்பானிலிருந்து ஒரு குடும்பம் பாகிஸ்தான் சென்றிருந்தது. ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் ஜப்பானிற்கு வருகை தந்துள்ளார்கள் என்பது அவர்களுக்கு தெரிய வந்தபோது அவர்கள் தமது நிகழ்ச்சிகளை முடித்துக் கொண்டு அன்றைய தினமே பாகிஸ்தானிலிருந்து ஜப்பானிற்கு திரும்பி வந்து விட்டார்கள். மேலும் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களை சந்திக்கும் நற்பேறை பெற்றார்கள்.

சந்திப்பிற்கான நற்பேறு பெறக் கூடிய அந்த அனைத்து குடும்பங்களும் தனது அன்பிற்குரிய எஜமானருடன் நிழற்படம் எடுத்துக் கொள்ளும் கண்ணியத்தையும் பெற்றார்கள். ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் பரிவுகூர்ந்து கல்வி பயிலக் கூடிய மாணவ, மாணவிகளுக்கு எழுதுகோலை அன்பளிப்பாக வழங்கினார்கள். மேலும் சிறுவர்களுக்கும், சிறுமியர்களுக்கும் சாக்லேட் கொடுத்தார்கள்.

திருக்குர்ஆனின் ஜப்பான் மொழியாக்கத்தின் மறு ஆய்வு பணியில் உதவி செய்யக் கூடிய இளைஞர்கள் மற்றும் இளைஞிகளை உள்ளடக்கிய குழுவினரும் தனித்தனியாக ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களை சந்தித்தார்கள். மேலும் தனித்தனி குழுவாக நிழற்படம் எடுத்துக் கொள்வதற்கும் நற்பேறு பெற்றார்கள்.

ஜப்பானின் தேசிய தலைவர் அவர்கள் அலுவல் ரீதியிலான சந்திப்பை நிகழ்த்தினார்கள். பல்வேறு விவகாரங்களில் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் வழிகாட்டல்களை வழங்கினார்கள். சந்திப்புகளின் இந்த நிகழ்ச்சி 9:00 மணி வரை தொடர்ந்தது.

### ஜப்பானின் தேசிய செயற்குழு உறுப்பினர்கள் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களை சந்தித்தார்கள்

இதன் பிறகு நிகழ்ச்சி நிரலுக்கேற்ப அஹ்மதிய்யா ஜமாஅத் ஜப்பானின் தேசிய செயற்குழுவின் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களுடனான சந்திப்பு ஆரம்பமானது.

ஜெனரல் செகரட்டரி சாஹிப் தனது அறிக்கையை சமர்ப்பித்தவாறு நாகோயா மற்றும் டோக்கியோ என்ற நமது இரண்டு ஜமாஅத்துகள் உள்ளன என்று கூறினார். அப்போது இரண்டு ஜமாஅத்துகளிலிருந்தும் அறிக்கை பெற்று வாருங்கள். செயலர்களிடமிருந்து அவர்களது துறை ரீதியாக கருத்துப் பரிமாற்றம் செய்யுங்கள். சத்ர் சாஹிப் அவர்கள் சார்பாகவும் அந்த அறிக்கைகளை குறித்து கருத்துகள் அனுப்பப்பட வேண்டும். இவ்வாறு செயல்பாடுகள் சிறந்ததாகி விடும் என்று ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்.

நேஷனல் செகரட்டரி மால் சாஹிப் அவர்களிடம் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் வருடாந்திர பட்ஜெட், சம்பாதிப்பவர்களின் எண்ணிக்கை, இங்குள்ள மாதாந்திர வருமானம் ஆகியவற்றைக் குறித்து விசாரித்தார்கள். அதற்கு வருடாந்திர பட்ஜெட் 15 மில்லியன் யென் (Yen) என்றும், அதே நேரம் சம்பாதிக்கக் கூடியவர்களின் எண்ணிக்கை 90 ஆகும் என்றும், அவர்களில் 79 நபர்கள் சந்தா அமைப்பில் பங்கு பெற்றுள்ளார்கள் என்றும் செகரட்டரி மால் கூறினார்.

ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் மிகவும் விளக்கமாக பல்வேறு அம்சங்களில் சந்தாவின் தரம் மற்றும் இங்குள்ள பல்வேறு மக்களின் வருமானத்தை ஆய்வு செய்தார்கள். மேலும் உங்களின் சந்தாவின் தரத்தை அதிகரிக்க முடியும் என்றும், உங்களின் 15 மில்லியன் யென் (Yen) பட்ஜெட் என்பது சாதாரண மக்கள் மூலமாகவே முழுமையடைந்து விட முடியும் என்றும் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் வழிகாட்டல் வழங்கினார்கள். அதேநேரம் இங்கு வியாபாரிகளும் உள்ளனர். ஏனைய சில சம்பாதிக்கக் கூடியவர்களும் உள்ளனர். அளவுகோலுக்கேற்ப சந்தா வழங்குவதற்கு முயற்சி செய்ய வேண்டும் என்ற உணர்வை அவர்களுக்கு ஊட்டுங்கள். சந்தா ஒன்றும் வரி (Tax) அல்ல. மாறாக, அது இறை திருப்தியைப் பெறுவதற்கானதாகும். எதைக் கொடுக்க வேண்டுமோ அதனை நேர்மையுடன் கொடுக்க வேண்டும். தவறான கூற்றுடன் செயல்படக் கூடாது.

நேஷனல் வஸிய்யத் செகரட்டரி தமது அறிக்கையை சமர்ப்பித்தவாறு, வஸிய்யத் செய்தவர்களின் எண்ணிக்கை 46 ஆகும். அவர்களில் 18 பேர் பெண்கள் ஆவர். அந்தப் பெண்களிலும் சிலர் சம்பாதிக்கக் கூடியவர்கள் அல்ல என்று கூறினார்.

ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்: 50 சதவிகித இலக்கை நீங்கள் முழுமை செய்ய வேண்டும். சம்பாதிக்கக் கூடிய 90 நபர்களில் 50 சதவிகித இலக்கை நீங்கள் பூர்த்தி செய்ய வேண்டும். இந்த அடிப்படையில் நீங்கள் உங்களது இலக்கை முழுமை செய்யுங்கள். உங்களது இலக்கில் நீங்கள் பின்தங்கியுள்ளீர்கள். எனவே குறையை நிவர்த்தி செய்யுங்கள். உங்களது இலக்கை முழுமை செய்யுங்கள்.

ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்: வஸிய்யத் செய்தவர்களின் தக்வாவின் தரம் மற்றும் தொழுகைகளை நிறைவேற்றுவது போன்றவை மிக உயர்ந்ததாக இருக்க வேண்டும். சந்தாவின் தரம் சிறந்ததாக இருக்க வேண்டும் என்பது மட்டுமல்ல. சந்தாவின் பக்கமே கவனம் இருப்பதும் சரியல்ல.. மாறாக, ஒழுக்கத்தின் தரமும் உயர்ந்ததாக இருக்க வேண்டும்.

உமூரே ஆமா செயலர் தனது அறிக்கையை சமர்ப்பித்தவாறு, மக்களுக்கு வேலை வாய்ப்பை பெற்றுக் கொடுப்பதிலும், அவர்களின் வியாபாரத்திலும் நான் அவர்களுக்கு உதவி செய்கின்றேன். இந்த துறையின் கீழ் ஏனைய பல்வேறு கடமையான விவகாரங்களை செயலாற்றுவதற்கும் நற்பேறு கிடைத்து வருகின்றது என்று கூறினார்.

தஹ்ரீகே ஜதீத் மற்றும் வக்ஃபே ஜதீத் செயலர்கள் இவ்வாறு கூறினார்கள்: அல்லாஹ்வின் அருளால் இந்த இரண்டு சந்தாக்களிலும் 198 நபர்களில் 163 ஜமாஅத் உறுப்பினர்கள் பங்கு பெற்றுள்ளனர்.

ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்: ஏனையவர்களும் பங்கு பெறுவதற்காக முயற்சி செய்யுங்கள். 100 சதவிகித மக்களும் பங்கு பெற்று விட வேண்டும். உங்களின் ஜமாஅத் சிறிய ஜமாஅத் ஆகும். இங்கு எல்லாரும் இணைந்து விட வேண்டும்.

தேசிய தஃலீமுல் குர்ஆன் மற்றும் வக்ஃபே ஆர்ஸி செயலருக்கு வழிகாட்டல் வழங்கியவாறு ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்: ஜமாஅத் உறுப்பினர்களைக் கொண்டு வக்ஃபே ஆர்ஸி செய்ய வையுங்கள். இங்கு அதிகமான பணி நடைபெற உள்ளது.

அப்போது செகரட்டரி சாஹிப் இவ்வாறு கூறினார்: ஹுஸூர்! வக்ஃபே ஆர்ஸி செய்யுமாறு அறிவுறுத்தப்பட்டது. ஆனால் எவரும் பதிலளிக்கவில்லை.

அதற்கு ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் இவ்வாறு அவருக்கு வழிகாட்டினார்கள்: அதாவது அறிவித்து விட்டு அமர்ந்து விடக் கூடாது. மாறாக, தொடர்ந்து நினைவூட்டிக் கொண்டிருப்பது அவசியமாகும். Follow Up செய்து வாருங்கள். உங்களது பணியை Organize செய்யுங்கள்.

திருக்குர்ஆன் கல்வி தொடர்பாக அறிக்கையை சமர்ப்பித்தவாறு வாரத்தில் நாங்கள் மூன்று வகுப்புகள் எடுக்கின்றோம். ஆனால் சில பிள்ளைகள் அதில் கலந்து கொள்வதில்லை என்று செகரட்டரி சாஹிப் கூறினார்.

அதற்கு ஜப்பானிய மொழியில் கற்றுக் கொடுங்கள். எந்தப் பிள்ளைகள் பங்கு பெறுவதில்லையோ அவர்கள் தொடர்பாக முரப்பி சாஹிப் மற்றும் செகரட்டரி தர்பிய்யத்தின் பணி என்னவென்றால், கிளை அமைப்புகளுடன் இணைந்து முயற்சி செய்ய வேண்டும். மேலும் அந்தப் பிள்ளைகளை அந்த வகுப்புகளில் பங்கு பெறச் செய்ய வேண்டும் என்றும் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்.

மேலும் நீங்கள் தொடர்ந்து பணி செய்து கொண்டு செல்ல வேண்டும். ஒரு நேரம் வரும். அப்போது அனைத்தும் சரியாகி விடும் என்று ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் செகரட்டரி சாஹிப் அவர்களிடம் கூறினார்கள்.

ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கேட்டதற்கு தேசிய வக்ஃபே நவ் செயலர் இவ்வாறு கூறினார்: வாக்கிஃபே நவ் பிள்ளைகளின் மொத்த எண்ணிக்கை 27 ஆகும். அவர்களில் 15 வயதுக்கு மேற்பட்டவர்களின்

எண்ணிக்கை 12 ஆகும். அவர்கள் அனைவரும் தமது வக்ஃப் படிவத்தை பூர்த்தி செய்து விட்டார்கள். மேலும் அதற்கான தகவல் தலைமையகத்திற்கும் கொடுக்கப்பட்டு விட்டது. அதற்கு ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள், அந்த அனைத்து வக்ஃபே நவ் குழந்தைகளிடமும் வக்ஃபே நவ் என்பது ஒரு டைட்டில் அல்ல. மாறாக, நீங்கள் உங்களது முழு வாழ்க்கையையும் ஜமாஅத்திற்கு அர்ப்பணித்துள்ளீர்கள். உங்களில் ஒவ்வொருவரும் வாழ்க்கையை அர்ப்பணித்தவர் ஆவார். ஜமாஅத் என்ன சொல்லுமோ அதனையே நீங்கள் செய்ய வேண்டும். உங்களுக்கு சொந்த அதிகாரம் இருக்காது என்பதை கூறி விடுங்கள்.

தேசிய இஷாஅத் செயலர் அவர்கள் தனது அறிக்கையை சமர்ப்பித்தவாறு கூறினார்: நாங்கள் அன்நூர் பத்திரிகையை ஜப்பானிய மொழியில் வெளியிட்டு வருகின்றோம். இது தொடர்ந்து வெளியாகி வருகின்றது.

தேசிய தர்பிய்யத் செயலர் அவர்களுக்கு ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் இவ்வாறு வழிகாட்டினார்கள்: ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் மேற்கோள்களை மொழியாக்கம் செய்து வெளியிடுங்கள். வீடுகளில் வழங்குங்கள். மக்கள் படித்து விடுவார்கள். இது தர்பிய்யத்திற்கு மிகவும் அவசியமாகும். இங்கு வாழ்க்கை மிகவும் முன்னேறிய நிலையில் உள்ளது. பௌதீகத்தின் பக்கம் கவனம் அதிகம் உள்ளது. தர்பிய்யத்திற்கு மிக அதிக அவசியம் உள்ளது.

தேசிய தப்லீக் செயலர் அவர்கள் தனது அறிக்கையை சமர்ப்பித்தவாறு ஜப்பானில் இந்த வருடம் 3 பைஅத்துகள் நடைபெற்றுள்ளன என்று கூறினார்.

அதற்கு ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள், தப்லீக் செய்வதற்கு இங்கு எத்தனை புத்தகங்கள் உள்ளன? என்று கேட்டார்கள். மேலும் இதுவரை வெளியான பிரசுரங்கள் மற்றும் நூல்களை ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் ஆய்வு செய்தார்கள். மேலும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் என்ன என்ன நூல்களின் மொழியாக்கம் வெளியாகி இருந்ததோ அவற்றை ஆய்வு செய்தார்கள். கிஷ்தி நூஹ் மற்றும் இஸ்லாமிய போதனைகளின் தத்துவஞானம் போன்றவை வெளியாகியிருந்தன. அதுமட்டுமின்றி தீபாச்சா தஃப்ஸீருல் குர்ஆன், Life Of muhammad போன்ற நூல்களின் மொழியாக்கமும் தயாராகி விட்டது. எந்தெந்த நூல்களின் மொழியாக்கம் முடிந்து விட்டதோ அதனை இனி விரைவாக வெளியிடுவதற்கு திட்டமிடுங்கள் என்று ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் வழிகாட்டினார்கள்.

வகீலுல் அஃலா சாஹிப் அனுப்பி வைக்கும் ஜுமுஆ பேருரை சுருக்கத்தை மொழியாக்கம் செய்து ஜமாஅத்தின் அனைத்து உறுப்பினர்கள் வரையும் எட்ட வையுங்கள். ஒவ்வொரு வாரமும் மக்களிடம் அந்த மொழியாக்கம் சென்று சேர்ந்து விட வேண்டும். ஈமெயில் மூலமாக அனுப்பி வைத்து விடுங்கள்.

ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்: தப்லீக்கிற்காக ஒன்றிரண்டு பக்கங்களை வெளியிடுங்கள். அதை அதிகமாக மக்களுக்கு வழங்கி விடுங்கள். இன்று நீங்கள் Asakusa சுற்றுப் பயணத்தின்போது வழங்கிக் கொண்டிருந்தீர்கள். அப்போது ஒரு நண்பர் 50 பிரசுரங்கள் வழங்கப்பட்டுள்ளன என்று கூறினார். அதற்கு ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் அதிகமான எண்ணிக்கையில் வைத்துக் கொள்ள வேண்டும். ஆயிரம் இருந்திருந்தாலும் அதை பங்கிட்டிருக்க முடியும் என்று கூறினார்கள்.

ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் வழிகாட்டல் வழங்கியவாறு புத்தகங்களின் வெளியீடு தொடர்பாக, எவ்வளவு எண்ணிக்கை தேவைப்படும் என்பதை முறையாக திட்டமிடுங்கள் என்றும், ஒருவேளை ஜப்பானில் அச்சிடும் பணியின் விலை கூடுதல் என்றால் பின்னர் சிங்கப்பூரில் அச்சக வேலையை ஆய்வு செய்யுங்கள். சிங்கப்பூரிலும் அச்சடிக்க முடியும். யூ.கே–வில் அச்சடிப்பதற்கும் ஆய்வு செய்யக் கூடும்.

ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்: தற்போது நீங்கள் புதிய இடத்தை பெற்று விட்டீர்கள். அது மிகவும் பரந்ததாகும். இனி உங்களுக்கு 4, 6 மாதங்களுக்குள் ஸ்டோரேஜிற்கான இடம் கிடைத்து விடும். எனவே புத்தகங்கள் அச்சிடுவது தொடர்பாக நிகழ்ச்சிகளை தயாரித்துக் கொள்ளுங்கள்.

ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்: நூல்களை தயாரிக்கும்போது இந்த திட்டத்தையும் மேற்கொள்ள வேண்டும். அதாவது ஜப்பானிய சமுதாயத்திற்கு அதன் இயல்பிற்கேற்ப எந்த நூலை கொடுக்க வேண்டும்? எந்த தலைப்புகளில் நூல்களை தயாரிக்க வேண்டும் என்ற திட்டம் இருக்க வேண்டும். மார்க்கத்தில் ஆர்வமூட்டுவதற்கு என்ன அவசியம் உள்ளது? அதற்காக எந்த நூலை தயார் செய்ய வேண்டும்? மேலும் அதேபோன்று இறைவன் மீதான நம்பிக்கையை வழங்குவதற்காக எந்த நூலை கொடுக்க வேண்டும்? என்றெல்லாம் நீங்கள் திட்டம் தீட்ட வேண்டும்.

ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் சத்ர் சாஹிப் குத்தாமுல் அஹ்முதிய்யாவிற்கு இவ்வாறு வழிகாட்டல் வழங்கினார்கள்: அதாவது தப்லீக்கிற்காக திட்டங்களை தீட்டுங்கள். உங்களது காதிம்களை அதில் இணைத்துக் கொள்ளுங்கள். சில கேள்விகளை தயாரித்து சில பகுதிகளை தேர்ந்தெடுத்து சர்வே எடுங்கள். அந்த சர்வேவின் முடிவில் கேள்விகளுக்கு கிடைக்கும் பதில்களிலிருந்து உங்களுக்கு இந்த விஷயம் தெரிந்து விடும். அதாவது அந்த மக்களின் இயல்பு என்ன? அவர்களின் பிரச்சனை என்ன? அவர்களுக்கு பதில் கொடுப்பதற்காக எதுபோன்ற புத்தகங்கள் அவசியமாகும்? என்பதெல்லாம் உங்களுக்கு தெரிந்து விடும்.

ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் செயற்குழு உறுப்பினர்களுக்கும் இவ்வாறு வழிகாட்டல் வழங்கினார்கள்: தப்லீக் செய்வதற்காக உங்களது வசதி வாய்ப்புகளை பயன்படுத்திக் கொண்டு திட்டம் தீட்டுங்கள். நீங்கள் பெரும் பெரும் திட்டங்களை தீட்டுகின்றீர்கள். முதலில் சிறிய அளவிலான விஷயங்களை செய்து காட்டுங்கள். பின்னர் முன்னால் அடியெடுத்து வையுங்கள். பெரும் திட்டங்களை தீட்டுவது எப்படிப்பட்டதென்றால் துவக்க பள்ளிக்கான தேர்விலேயே தேர்ச்சி பெறாமல் M.A பட்டத்தைப் பெறுவதற்கு துவங்கி விடுவதைப் போன்றதாகும்.

ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்: செயற்குழுவின் உறுப்பினர்கள் தங்களது தனிப்பட்ட தொடர்புகளை உருவாக்கிக் கொண்டு தப்லீக் செய்ய துவங்கி விட்டால் அதன் மூலம் 5, 6 பைஅத்துகள் நடந்து விட முடியும். உங்களில் பெரும்பாலோர் ஜப்பானியர்களுடன் வியாபாரம் செய்கின்றனர். அவர்களுடன் இணைந்து பணி செய்கின்றீர்கள். இந்த சமூகத்தில் அவர்களுடன் வசிக்கின்றீர்கள். எனவே அவர்களுக்கு தூதுச் செய்தியை எட்ட வைக்க வேண்டும். மேலும் அவர்களுக்கு தப்லீக் செய்ய வேண்டும்.

ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்: தேசிய செயற்குழுவின் உறுப்பினர்கள், 2 ஜமாஅத்துகளின் செயற்குழு உறுப்பினர்கள், கிளை அமைப்புகளின் செயற்குழு உறுப்பினர்கள் என்று ஒவ்வொருவரும் தப்லீக்கிற்காக முயற்சி செய்தால் தனிப்பட்ட தொடர்புகளை உருவாக்கிக் கொண்டு தூதுச் செய்தியை எட்ட வைத்தால் அதன் மூலம் 50, 60 பைஅத்துகள் கூட நடைபெற்று விடும்.

தேசிய சொத்துச் செயலர் இவ்வாறு கூறினார்: நாகோயாவிற்குப் பிறகு டோக்கியோவிலும் பள்ளிவாசலுக்கான அவசியம் உள்ளது. இங்கு ஜமாஅத் சென்டர் வாடகைக்கு எடுக்கப்பட்டுள்ளது. அதன் வருடாந்திர செலவீனங்கள் மிக அதிகமாக இருக்கின்றன. தற்போது நமக்கென்று ஒரு சென்டரை நாம் கட்டி விட்டால் பின்னர் வாடகைக்கான அந்த செலவீனங்கள் மிச்சமாகி விடும்.

அப்போது ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்: முதலில் நாகோயாவின் பள்ளிவாசல் பணியை விரைவாக முழுமை செய்யுங்கள். மேலும் ஜமாஅத்தை ரிஜிஸ்டர் செய்யுங்கள். பின்னர் டோகியோவிற்கான திட்டத்தை தீட்டுங்கள்.

ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்: முதலில் ஒரு சிறிய ஹாலையும், ஒன்றிரண்டு அறைகளையும், வுளு செய்வதற்கான இடத்தையும் உருவாக்கிக் கொள்ள முடியும். டோக்கியோவில் ஜமாஅத்திடம் உள்ள இடத்தில் ஒரு சிறிய அதாவது 50 அல்லது 100 நபர்கள் தொழக் கூடிய ஒரு ஹால், 2 அறைகள், வுளு செய்யக் கூடிய இடங்கள், சமையல் அறை போன்றவற்றை கட்ட வேண்டுமென்றால் என்ன செலவாகும்? என்பதை ஆய்வு செய்து எனக்குக் கூறுங்கள்.

ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களிடம் இந்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. தற்போதைய நிலம் டோக்கியோவிலிருந்து மிகவும் வெளியில் உள்ளது. நகரத்திலிருந்து தொலைவில் இருக்கின்றது. அப்போது ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்: அஹ்மதி நண்பர்களின் வீடுகள் எங்கு உள்ளனவோ அங்கிருந்து அரைமணி நேரத் தொலைவில் உகந்த இடம் ஒன்றை பாருங்கள். பள்ளிவாசல் போன்றவற்றை கட்டிக் கொள்வதற்கு அனுமதி வழங்கப்படும் பிளாட்டை தேடுங்கள். ஏற்கனவே கட்டப்பட்ட கட்டிடம், ஹால் போன்றவை கிடைக்குமென்றால் அதை வாங்கிக் கொள்ளுங்கள்.

ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்: உங்களுக்குள் அன்புடனும், நேசத்துடனும் வாழ்வதற்கு கற்றுக் கொள்ளுங்கள். ஒற்றுமை உருவாகி விடுமென்றால் பின்னர் உங்களது எல்லாப் பணிகளிலும் பரக்கத் ஏற்படும்.

EDITOR
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
SUB EDITOR
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly **BADAR** Qadian
பதர் வாரப் பத்திரிகை காதியான்
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2020-2022 Vol. 7 Thursday 12 May 2022 Issue No. 19

MANAGER
SHAIKH MUJAHID AHMAD
Mobile : +91 99153-79255
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.575/- (Per Issue Rs. 11/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

தேசிய கல்விச் செயலருக்கு வழிகாட்டல் வழங்கியவாறு ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: உங்களது அனைத்து மாணவர்களின் Data வையும் முழுமை செய்யுங்கள். பல்கலைக்கழகம், கல்லூரிகள், High School மற்றும் Primary பள்ளிக் கூடங்களில் கல்வி பயிலக் கூடிய மாணவ, மாணவிகளின் அனைத்து புள்ளிவிவரங்களையும் தயார் செய்து அதன் ரெக்கார்டை முழுமை செய்யுங்கள். வயதின் அடிப்படையில் ரெக்கார்டு இருக்க வேண்டும். மேலும் என்னென்ன பாடத்தில் எத்தனை மாணவர்களின் கல்வி எந்த நிலையில் உள்ளது? என்று பாடத்தின் அடிப்படையிலும் ரெக்கார்டு முழுமையாக இருக்க வேண்டும்.

அன்ஸாருல்லாஹ் ஸமீம் சாஹிப் அந்த சந்தர்ப்பத்தில், நாங்கள் 500 திருக்குர்ஆனை ஜப்பானின் பல்வேறு நூலகங்களில் வைத்துள்ளோம் என்று கூறினார். அதற்கு ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள், அவ்வாறு செய்யும்படி மற்றவர்களுக்கும் கூறுங்கள் என்று கூறினார்கள்.

ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்: கித்மத்தே கல்க் பணிகள் மூலமாக செய்தித்தாள்களிலும், மீடியாக்களிலும் என்ன Projection கிடைக்கின்றதோ அதன் மூலம் ஜமாஅத்தின் அறிமுகம் அதிகமாகின்றது. மேலும் இன்றைய சூழ்நிலையில் இந்த Projection அவசியமாகும். ஏனென்றால் அப்போது தான் இஸ்லாத்தின் அழகிய முகம் மக்களுக்கு முன்னால் வரும். மேலும் இஸ்லாத்தைப் பற்றி அவர்களின் உள்ளங்களில் உள்ள எதிர்மறையான சித்திரம் முடிவுக்கு வரும்.

ஜப்பானின் தேசிய செயற்குழு உறுப்பினர்களின் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களுடனான இந்த சந்திப்பு 9:15 மணியளவில் முடிவடைந்தது. அதன் பிறகு செயற்குழு உறுப்பினர்கள் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களுடன் கூட்டு நிழற்படம் எடுத்துக் கொள்வதற்கு நற்பேறு பெற்றார்கள்.

**ஆமீன் நிகழ்ச்சி**

இதன் பிறகு ஆமீன் நிகழ்ச்சி நடந்தது. ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் அருள்கூர்ந்து அன்பிற்குரிய யஹ்யா அஹ்மது, நயீம் அஹ்மது, ஃபர்ஸான் அஹ்மது ஆகியோரிடமிருந்து திருக்குர்ஆனின் ஒரு வசனத்தை ஓதச் செய்து அதனை செவியுற்றார்கள். இறுதியில் துஆ செய்து வைத்தார்கள்.

அதன் பிறகு கொரியாவிலிருந்து வந்திருந்த இரண்டு முபல்லிக்மார்கள் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களுடன் நிழற்படம் எடுத்துக் கொள்ளும் நற்பேறு பெற்றார்கள். அதன் பிறகு 10 மணியளவில் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் மக்ரிப் மற்றும் இஷா தொழுகையை ஜமு செய்து தொழ வைத்தார்கள். தொழுகைகளை நிறைவேற்றிய பிறகு ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் தமது தங்குமிடத்திற்கு திரும்பிச் சென்றார்கள்.

ஜப்பானின் ஒரு பிரபலமான பத்திரிகையான ஆஸாகியின் நிருபர் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களை நேர்காணல் செய்தார். அது ஜப்பானின் 2வது பெரிய பத்திரிகை ஆகும். அதன் Circulation 2 கோடிக்கும் அதிகமாகும். அந்த செய்தித்தாள் 14 நவம்பர் 2013 அன்று தனது பதிப்பில் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் நிழற்படத்துடன் சுற்றுப்பயணம் தொடர்பாக கீழ்க்கண்ட செய்தியை வெளியிட்டது.

**Tsushima–வில் ஓர் இஸ்லாமிய அமைப்பின் தலைமையத்திற்கான அடித்தளம்**

இஸ்லாத்தின் ஓர் அமைப்பு அஹ்மதிய்யத் ஆகும். அதன் தலைமையகம் லண்டனில் உள்ளது. உலகளாவிய தலைவர் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது சாஹிப் நவம்பர் 9 ஆம் தேதி நாகோயாவில் ஒரு வரவேற்பு நிகழ்ச்சியின் சந்தர்ப்பத்தில் சொற்பொழிவிற்கு முன்பாக ஆஸாகி செய்தித்தாளிற்கு நேர்காணல் கொடுத்தவாறு Tsushima பகுதியில் Hiruma வில் முதல் பள்ளிவாசல் கட்டப்பட்டதற்கான அறிவிப்பைச் செய்தார்கள்.

இந்த பள்ளிவாசல் முதலில் ஒரு விளையாட்டு ஹாலாக இருந்தது. மேலும் இது 2 அடுக்கு மாடி கட்டடத்தைக் கொண்டிருந்தது. அது முறையாக புதிய ஆண்டின் தொடக்கத்தில் திறக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மார்க்கம் அல்லது இன பேதங்களை கடந்து அனைவரும் இந்தப் பள்ளிவாசலுக்கு வர முடியும் என்று கலீஃபத்துல் மஸீஹ் கூறினார்கள்.

**12 நவம்பர் 2013 (செவ்வாய்கிழமை)**

காலை 5:15 மணியளவில் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் ஃபஜர் தொழுகையை நடத்தினார்கள். தொழுகையை நிறைவேற்றிய பிறகு ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் தனது தங்குமிடப் பகுதிக்கு திரும்பிச் சென்றார்கள்.

**ஜப்பானிலிருந்து லண்டனிற்கு புறப்பாடு**

**மஸ்ஜித் ஃபஸல் லண்டனிற்கு வருகையும், வரவேற்பும்**

இன்று ஜப்பானிலிருந்து லண்டனிற்கு புறப்படும் நாளாக இருந்தது. 8:30 மணியளவில் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் ஹோட்டலிலிருந்து வெளியே வருகை தந்தார்கள். மேலும் கூட்டுத் துஆ செய்தார்கள். மேலும் டோக்கியோவின் இன்டர்நேஷனல் விமான நிலையமான Narita விற்கு புறப்பட்டார்கள். டோக்கியோ மற்றும் நாகோயா ஜமாஅத்தின் உறுப்பினர்களான ஆண்களும், பெண்களும், சிறுவர்களும், சிறுமிகளும் தமது அன்பிற்குரிய எஜமானரை வழியனுப்பி வைப்பதற்காக காலையிலேயே விமான நிலையத்தில் ஒன்றுகூடி இருந்தார்கள். ஜப்பானின் வெளியுறவு துறை அமைச்சகத்தின் இரண்டு பாதுகாப்பு அதிகாரிகள் சிறப்பு ஏற்பாடுகளுக்காக விமான நிலையத்திற்கு வந்திருந்தார்கள். அந்த சிறப்பு ஏற்பாட்டின் கீழ் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் விமான நிலையத்திற்கு வருவதற்கு முன்பாக பொருட்களை எடுத்துக் கொண்டு Boarding Card களை பெறுவதற்கும், Passport Exit Stamp அடிப்பதற்குமான ஏற்பாடுகள் ஏற்கனவே முழுமையடைந்திருந்தன.

9:40 மணியளவில் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் விமான நிலையத்திற்கு வருகை தந்தார்கள். ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் வண்டியிலிருந்து வெளியே வருகை தந்ததும் வெளியுறவு அமைச்சகத்தின் பாதுகாப்பு அதிகாரிகள் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களை வரவேற்றார்கள். மேலும் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களை தம்முடன் விமான நிலையத்திற்குள் அழைத்துச் சென்றார்கள். ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் வழியனுப்ப வந்திருந்த ஜமாஅத் உறுப்பினர்களுடன் கை குலுக்கினார்கள். பெண்களை சந்தித்தார்கள். ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் தமது கரங்களை உயர்த்தி அனைவருக்கும் அஸ்ஸலாமு அலைக்கும் என்று கூறினார்கள். மேலும் விமான நிலையத்தின் உள் அரங்கின் பகுதிக்குள் சென்று விட்டார்கள். இரண்டு பாதுகாப்பு அதிகாரிகளும் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களை தங்களுடன் முதல் வகுப்பு லவுன்ச்சிற்கு அழைத்துச் சென்றார்கள். அங்கு ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் சிறிது நேரம் வரை தங்கினார்கள். அங்கிருந்து 11 மணியளவில் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் விமானத்தில் ஏறி அமர்ந்தார்கள். பாதுகாப்பு அதிகாரிகள் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களை விமானத்தின் வாசல் வரை அழைத்து வந்து விட்டு விட்டுச் சென்றார்கள்.

British Airways விமானம் BA06 11:20 மணிக்கு டோக்கியோவின் narita விமான நிலையத்திலிருந்து லண்டனின் ஹேத்ரு விமான நிலையத்திற்கு புறப்பட்டது. சுமார் 12:30 மணி நேரம் விமானம் தொடர்ந்து பயணித்த பிறகு லண்டனின் உள்ளூர் நேரத்திற்கேற்ப 3:30 மணியளவில் விமானம் லண்டனின் ஹேத்ரூ இன்டர்நேஷனல் விமான நிலையத்தில் தரை இறங்கியது. பிரிட்டரின் நேரம் ஜப்பானின் நேரத்திலிருநது 9 மணி நேரம் பின்தங்கியுள்ளது. விமானத்தின் வாசலில் விமான நிலையத்தின் ஓர் பாதுகாப்பு அதிகாரி ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களை வரவேற்று தன்னுடன் சிறப்பு லான்ச்சிற்கு அழைத்துச் சென்றார்.

(பத்ர் பத்திரிகை உருது – 13 மார்ச் 2014)

(தொடரும்)

......☆......☆......☆......

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad